185

# TH...

THA...

ABILIT...

# DANCING GIR...

## தளுக்கு தங்கம் தாராள ...

அல்லது

# தாசியின் சாகசம்.

ஒயாச்சிறிப்பைத்தரும் தமிழ் நாவல்

K, சோமசுந்தர முதலியார்

எழுதியது

முதல் பதிப்பு.

M. ராதாகிருஷ்ண நாயுடு அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

**Printed at the Sri Subramaniya Vilasum Press,**

**220-Mint Street, Madras.**

1927.

*Copy rightregistered.*

Price As-2, Postage Extra

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
175083

# முகவுரை.

"தளுக்குதங்கமும் தாராளமைனரும்" என்னும் இச்சிரிய புத்தகத்தை எழுதியது, எழுதும் திரத்தையும் சாமர்த்தியத்தையும் காண்பிப்பதற்காக அல்ல. மதராஸில் தாசி வீடுகளில் நடக்கும் அநியாயத்தையும், சூதையும் தெரிந்துக்கொள்ளாமல் கையிலுள்ள பொருளையும் இழந்து சரீரத்திற்கு ஊனத்தையும் அநேகர் தேடிக்கொள்ளுகிறார்கள். இச்சிறு புத்தகத்தை படித்த பிறகாவது தாசிகளை நஞ்சுள்ள சற்பம்போல நினைத்து நல்வழியில் திரும்புவர் என்னும் நோக்கத்துடன் எழுதலானேன். இச்சிறு புத்தகத்தை ஒருபொருட்டாகஎண்ணி பிரசுரிக்க முன்வந்த ம-ா-ா-ஸ்ரீ M. ராதாகிருஷ்ண நாயுடு அவர்களுக்கு என்மனமார்ந்த வந்தனத்தை செலுத்த கடமைபட்டுள்ளேன்.

K. சோமசுந்தரம்,
321, தங்கசாலை தெரு,
சென்னை.

உ

கடவுள் துணை.

# தளுக்கு தங்கமும் தாராள மைனரும்

அல்லது

# தாசியின் சாகசம்.

## தற்புத்தி புகட்டும் தமிழ் நாவல்

K, சோமசுந்தர முதலியார்

எழுதியது

OFFICE OF THE REGISTRAR
21 OCT 1927
MADRAS

முதல் பதிப்பு.

M. ராதாகிருஷ்ண நாயுடு அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

Printed at the Sri Subramaniya Vilasum Press,

220-Mint Street, Madras.

1927.

*Copy right registered.*

Price As-2, விலை அணா 2.

OFFICE OF THE REGISTRAR
21 OCT 1927
MADRAS

உ
கணபதிதுணை.

# தளுக்குதங்கமும் தாராளமைனரும்
அல்லது
# தாசியின் சாகசம்.

## (முதல் அத்தியாயம்.)

கடந்த அக்ஷய வருஷம் தை மாதம் தைபூசத்தன்று மதருஸ் தங்கசாலை வீதியில் இறவு 9-மணிக்கு ஜனங்கள் திரள் திரளாக போய்க்கொண்டிருந்தார்கள். அதில் பெரும்பான்மையோர் வாலிபர்களும் மங்கையர்களுமே யாவர். அன்றயதினம் சென்னை கந்தஸ்வாமி ஆலயத்தில் கைலாஸ பர்வதம் புரப்பாடாகையால் ஆலயத்தருகிலும், ரதம் ஓடப்போகும் வீதிகளிலும் ஜனங்கள் நிரைந்திருந்தார்கள். அநேக வாலிபர்கள் நல்ல உடை உடுத்திக்கொண்டு கண்களில் மூக்குக்கண்ணாடி, கையில் வாகிங்ஸ்டிக் இவைகளுடன் இளமங்கையர்கள் மீதிலேயே கண்ணாக உலாவிக்கொண்டிருந்தார்கள். சில காலிப்பையல்கள் கூட்டத்தின் மத்தியில் புகுந்து பெண்பிள்ளைகளை இடித்துக்கொண்டு போவதும், அதனால் சிறிது சந்தோஷமடைவதுமான வேடிக்கைகள் செய்துகொண்டிருந்தார்கள். அநேக தாசிகளும் வாலிபர்களை மயக்கி ஓட்டாண்டியாக்கும் நோக்கத்துடன் நல்ல உடைகளை உடுத்திக்கொண்டு முகத்தில் புன்னகை ததும்ப ஒருவர்க்கொருவர் விளையாடிக்கொண்டும் சிறித்துக்கொண்டும் இருந்தார்

கள். வாலிபர்கள் யாராவது இவர்களை நெருங்கினால்வெட்கப்பட்டவர்கள் போல ஒடுங்கி ஙாணி கோணி கடைக்கண்களால் ஒரு ரவுண்டடிப்பார்கள். இன்னும் எல்லா வைபவங்களையும் எழுதவேண்டுமானால் இப்புத்தகம் இடந்தராது. ஆதலால் இம்மட்டோடு நிறுத்துவோம்.

மணி 11 அடித்தது ரதமும் புரப்பட்டுவிட்டது. எங்கு பார்த்தாலும் "அரோஹரா" என்னும் கோஷ்டமாகவே யிருந்தது. காந்தவிளக்குகள் கண்களை கூசச் செய்யும்படியாக வரிசை வரிசையாக ரதத்திற்கு முன்பாக போய்க்கொண்டிருந்தன ரதமும் தங்கசாலை வீதியை யடைந்தது. சிறுது கோத்திற்குள் கோவிலருகில் ஒரு பெரிய குழப்பம் உண்டாயிற்று. ஜனங்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து அதைபார்க்க ஓடினார்கள். சிலர் "சண்டை! சண்டை" என்று கத்தினார்கள். சண்டையுமில்லை ஒன்றுமில்லை. ஒரு அழகிய யௌவனப் பெண் காலில் காயப்பட்டு ரத்தம் ஒழுக உட்கார்ந்துக்கொண்டிருந்தாள். அனேக மைனர்கள் உபசாரம் செய்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் மாத்திரம் ரொம்பவும் உருக்கத்துடன் உபசாரம்செய்துகொண்டிருந்தார். அவர் தோற்றத்திலேயே தனவந்தனென்றுதென்பட்டது. காயத்திற்கும் கட்டுகட்டியாய்விட்டது. அந்த பெண் மைனரை கடைக்கண்களினால் பார்த்து ஒரு ரவுண்டடித்துவிட்டு,

"தங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். முன்பின் அரியாத எனக்கு தாங்கள்செய்த உதவிக்கு எது கொடுத்தாலும் ஈடாகாது."

மைனர்:—"பரவாயில்லை ஒருவர்க்கொருவர் உதவிசெய்யும்பொருட்டே கடவுள் நம்மை படைத்தார். உனக்

கு ரொம்பவும் இளைப்பாக இருக்கும். ஆனந்தபவான் ஓட்டலுக்குச் சென்று சூடாக காபி சாப்பிட்டுவிட்டு அப்புரம் வீடுபோய்சேரலாம். ஒருவண்டியை கூப்பிடட்டுமா? என்றான். பெண்ணும் பதில் பேசாமல் தன்னுடைய சம்மதத்தை தெரிவித்தாள். மைனரும் ஒரு ஜட்கா வண்டியைக்கொண்டுவந்து அதில் அப்பெண்ணை ஏற்றினர். அப்பெண்ணின் தாயாகிய கிழவியும் பின்புறம் ஏறி உட்கார்ந்தாள். மைனரும் முன்பக்கம் ஏரி உட்கார்ந்தார். வண்டியும் ஓட்டலை நோக்கி புறப்பட்டது.

வண்டி ஓட்டலைச் சேருவதற்குள் அப்பெண்ணைப் பற்றியும், மைனரைப்பற்றியும் சிறிது கூறுவோம். வண்ணாரப்பேட்டையிலுள்ள "லக்ஷ்மி விலாசம்" என்னும் வீட்டில் அந்த மைனர் வசிக்கிரான். அவன்பெயர் "துரைசாமி" அவனுடைய தாயார் இவன் சிறுகுழந்தையாக இருக்கும்பொழுதே விண்ணுலக மடைந்தாள். தகப்பனும் 5-லட்ச ரூபாய்க்குமேல் பொரும்படியான ஆஸ்திதியை பிள்ளைக்கு சம்பாதித்து வைத்துவிட்டு ருத்ராபூமியைச் சேர்ந்தார். துரைசாமியும் அவனுடைய மனைவியாகிய "விசாலாக்ஷியும்" அந்த வீட்டில் வசித்துவருகிறார்கள். இவர்களுக்கு விவாகம் நடந்து 2-வருஷங்களாய்விட்டபோதிலும் குழந்தைகளொன்றுமில்லை.

பெண்ணைப்பற்றி கொஞ்சம் பேசுவோம். தங்கசாலை வீதியில் தாசிவீட்டிற்கு பஞ்சமில்லை. சுமைதாங்கிக்கு அருகில் இருக்கும் ஒரு பெரிய வீட்டில் இவள் வசிக்கிறாள். இவளுடைய இயர்க்கைப் பெயர் "தங்கம்" அவளுடைய நடைக்கும், உடைக்கும், சாகசத்திற்கும், வியந்து அவளுடைய தாயார் "தளுக்கு" என்னும் காரணப்பெயரை

சேர்த்து "தளுக்குதங்கம்" என்று நாமம் சூட்டினுள். அந்த நாமத்தைக்கொண்டே பல கொழுத்த மைனர்களுக்கு நாமம் தீட்டினுள். எவனுவது கையிருப்பான ஆசாமியை வலேயில்போடவே கோவிலுக்கு வந்தார்கள். துரைசாமியும் அவள் வலேயில் சிக்கிக்கொண்டு ஒட்டலுக்கு போய்க்கொண்டிருக்கிறுன். அவனுடைய கதி என்னவாகின்றதோ போகப்போகத் தெரியும்.

வண்டியும் ஒட்டலேச் சேர்ந்தது. மூவரும் இரங்கி உள்ளே சென்றுர்கள். கூட்டம் அதிகமானதால் இடங்கூட கிடைப்பது கஷ்டமாக இருந்தது ஒருபக்கம் காலியாக இருந்த மூன்று நாற்காலிகளில் மூவரும் உட்கார்ந்தார்கள். ஒட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருந்த மைனர்களுடைய கண்களெல்லாம் அம்மாவின்பேரிலேயே இருந்தது தங்கமும் அவளுடைய தாயாரும் ஒருவர்க்கொருவர் பார்த்து தங்களுடைய பிரயத்தனம் பலித்ததென்று கண்களினுல் பேசிக்கொண்டார்கள். ஒட்டலின் முதலாளியும் அம்மாவின் மேல் நோக்கமாக காசைக்கூட எண்ணுமல் மேஜையில் தள்ளிக்கொண்டிருந்தான். மேஜையை சுத்தம்செய்யும் மலேயாளி அம்மாவின் மேல்நோக்கத்துடன்பட்சணம் இருக்கும் தட்டுகளேக்கூட எடுத்துபக்கட்டில் போட்டுக்கொண்டிருந்தான். ஒரு பரிசாரக ஐயர் பில் கொடுப்பதற்காக மேஜையின்பேரிலிருக்கும் பில் புத்தகத்தையும் பென்விலேயும் அம்மாவைப் பார்த்தபடியே தடவினுர். பில்புத்தகமும், பென்விலுக்கு பதிலாக ஒரு ஸ்பூனும் அகப்பட்டது. ஸ்பூனே பென்விலென்று நினேத்து புத்தகத்தை பார்க்காமல்கூட 3. 6 அணு என்று ஸ்பூனிணு லெழுதிக்கொடுத்தார். ஒரு மைனர் வாயர்படியருகில் சிகரெட் பிடித்துக்கொண்டே தங்கத்தை கவனித்

துக்கொண்டிருந்தார். மறுமுறை புகை உறுஞ்சுவதற்காக சிகரெட்டை வாயில் வைக்கும்பொழுது நெருப்பு இருக்கும் பக்கத்தை வாயில் வைத்துக்கொண்டார். ஒரு மைனர் தன்னுடைய முடுக்கைப் பார்த்து மெச்சிக்கொள்ள வேண்டுமென்று வேகமாக கியாஷுயரிடம்போய் ரூபாயைக் கொடுத்தார். அவர் சில்லரை கொடுப்பதற்குள் மைனர் கோபம் செய்துகொண்டு சில்லரைகூடவாங்காமல் வேகமாக வெளியே போனார். வாயற்படி யருகில் தலையை சாய்த்துக்கொண்டு போக மரந்துவிட்டார். வாயர்படியிலுள்ள தாழ்ப்பாளில் இவர் தலை மோதி நெற்றியில் ஒரு உருண்டை கிளம்பிவிட்டது. ஒரு மைனர் நாற்காலியில் ஒய்யாரமாகஉட்கார்ந்துகாலைவழியில்நீட்டி மீசையை முறுக்கிக்கொண்டிருந்தார், ஒரு ஐயர் கையில் காபி கோப்பையுடன் அம்மாவைப்பார்த்துக்கொண்டே வந்தார். வந்தவர் மைனருடைய கால் வழியில் நீட்டப்பட்டிருப்பதை கவனியாமல் கால் தடுப்பட்டு குப்புர விழுந்தார். அவர் விழுந்தது எதுமாதிரியாக இருந்ததென்றால் தன் மனதை கொள்ளைகொண்ட அம்மையைதன்னை ஆட்கொள்ளும்படியாகவேண்டி சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிப்பதுபோலிருந்தது.

இன்னும் அங்கு நடந்த வேடிக்கைகளை விவரிப்பதென்றால் கதை பூர்த்தியாகாது. கதையை தொடருவோம். தங்கம் சாப்பிட்டுக்கொண்டே துரைசாமியை பார்த்து புன்னகை புரிவதும் குனிந்துக்கொள்ளுவதுமாக இருந்தாள்.

துரை:—உன்னுடைய வீடு எங்கே?

தங்கம்:— "சுமைதாங்கியருகில், தாங்கள் இந்த ஏழையினுடைய வீட்டிற்கு வந்துதான் போகவேண்டும்.

துரை:—"இல்லை நாளைய தினம் வருகிறேன். என்னுடைய மனைவி தனிமையாக இருக்கிறாள் என்வரவை எதிர்ப்பார்த்துக்கொண்டிருப்பாள்.

தங்கம்:—"இருந்தாலென்ன? ஏதோ ஒரு சாக்கு சொன்னால் போய்விட்டது. பெண்களுக்கு பயப்படும் ஆண்பிள்ளை ஒரு ஆண்பிள்ளையா? துரைசாமிக்கு ஒன்றும் பதில் சொல்ல தெரியவில்லை. மௌனமாக இருந்துவிட்டான். சாப்பிட்டானவுடன் எல்லோரும் வண்டியிலேறினார்கள், வண்டியும் தங்கத்தின் வீட்டில் வந்து நின்றது. வண்டியைவிட்டிரங்கினதும் துரைசாமி வண்டி சத்தம் கொடுத்துவிட்டான். தங்கம் துரைசாமியை அழைத்துக் கொண்டு மெத்தையின்மேல் போனாள். மெத்தையின் மேல் உள்ள ஹாலில் அனேகவிதமான விசித்திரப்படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தது முன்பக்கத்திலிருக்கும் அரையில் ஓர் அழகான கட்டில் போடப்பட்டிருந்தது, சுவற்றில் காமத்தை மூட்டும்படியான அனேக பிரன்ச் படங்கள் மாட்டப்பட்டிருந்தது. முன்பக்கத்திலிருக்கும் அரையில் ஓர் அழகான கட்டில் போடப்பட்டிருந்தது, தங்கம் துரைசாமியை அந்த அரையிலுள்ள கட்டிலில் உட்காரவைத்து உபசாரம்செய்தாள்.

தங்கம்:—"நாங்கள்செய்த பூஜாபலன் தாங்கள் எங்களுடைய வீட்டில் கால் வைத்தீர்கள்"

துரை:— "நான் கால்வைப்பதற்கு பூஜை செய்ய வேண்டுமோ? வேடிக்கையாகத்தானிருக்கிறது. இதற்குள்ளாக கிழவி அவ்விடம்வந்து "தங்கம்! தம்பிக்கு காபி வைக்கலாமென்று பார்த்தால் பால் எங்கேயும் கிடைக்கவில்லை. மணி ஒன்றடித்துவிட்டது.

துரை:— "இப்பொழுதுதான் காபி சாப்பிட்டேன். இதற்குள்ளாக மறுபடியும் காபியா" வேண்டாம் நான் போய் நாளையதினம் வருகிறேன், என்று சொல்லிக் கொண்டே எழுந்தான். தங்கம் அவன் கையைப்பிடித்து இழுத்து உட்காரவைத்து ஐந்து நிமிஷம்கூட உட்காரா மல் போகிறீர்களே! தங்களைப் பார்த்தபொழுதே தாங் கள்தான் என்னுடைய உயிருக்குமினிய காதலரென்று நினைத்துவிட்டேன். தங்களை எப்படி இவ்வளவு சீக்கிரம் அனுப்பிவிடுவேன், என்று நெளித்துக்கொண்டும் புன்ன கை செய்துக்கொண்டும் சொன்னாள். துரைசாமிக்கு மெய் சிலிர்த்தது. அவன் அடைந்த ஆனந்தத்திற்கு அள வேயில்லை. பதில் சொல்லவும் தெரியவில்லை. தங்கமும் அவனுடைய நிலைமையை தெரிந்துக்கொண்டாள். அவன் மேல விழுந்து கட்டியணைத்து முத்தமிட்டாள். துரைசா மிக்கு பூவுலகத்தில்தான் இருக்கிறோமோ அல்லது தேவ லோகத்தி லிருக்கிறோமோ என்று சந்தேகித்தான்.

கிழவி:— "என்னமோ ரொம்பவும் அருமையாக வளர்த்தேன். உன்பேரில் ரொம்பவும் ஆசைப்பட்டுவிட் டாள். அவளுடைய மனம் நோகாமல் வைத்திருப்பது உன்கடமை"

துரை:— இப்பேர்பட்ட ஓர் அழகி அகப்படுவது ரொம்பவும் துர்லபமல்லவா. நான் செய்த புண்ணியம் எனக்கு கிடைத்தது.

கிழவி:—"எத்தனை பெரிய பெரிய ஜமீன் தார்ர்களெ ல்லாம் 1000-தருகிறேன் 2000-தருகிறேனென்று சொன் னார்கள் ஒருவர்பேரிலும் அவள் மனம் நாடவில்லை. கடைசியில் உன்பேரில் ஆசைப்பட்டாள்.

துரை:—சரி மணியாய்விட்டது நாளைபதினம் வருகிறேன்'' என்று எழுந்தான்.

தங்கம்:—நாளைபதினம் வேண்டாம் தயவுசெய்து மறுதினம் வாருங்கள் என்னுடைய நிலம்கொஞ்சம் அரும்பாக்கத்திலிருக்கிறது, அதை என் தாயார் வெகுநாளைக்கு முன்பு ஐயாயிர ரூபாய்களுக்கு அடகுவைத்திருந்தார்கள். இப்பொழுது வட்டி எல்லாம் சேர்ந்தது ஒன்பதினாயிரம் ரூபாய்களாகின்றது. அந்த நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவன் வருகிர திங்கட்கிழமைக்குள் பணம் செலுத்தா விட்டால் ஏலத்திற்கு கொண்டுவருவதாக சொல்லுகிறான். நாளையதினத்திற்குள் ரூபாய்தயார்செய்ய வேண்டும். நாளைய பூராவும் அந்தவேலையிருக்கிறது, என்றாள் துரைசாமிக்கு நாளைய ஒரு தினம் எப்படி கழிப்பதென்று தோன்றவில்லை சிறிதுயோசனை செய்து "சிலவு மொத்தமும் சேர்ந்து 10000 ரூபாயாகுமா?

தங்கம்:—"ஆகும்"

துரை:—"சரி நாளையதினம் 10000-ரூபாய்கொண்டு வருகிறேன் உனக்கு ஏன் வீண் கஷ்டம்?

கிழவி:—"என்னடி! தங்கம்" தம்பி தருகிறாரே? நீ ஏன் அனுவஸ்யமாக செங்கல்பட்டிற்கு போகவேண்டும். தம்பிக்கு அக்கரையில்லையா? உன் நிலம்வேறு தம்பி நிலம் வேறா?

தங்கம்:—"திடீரென்று கையில் ரூபாய்இருக்குமோ என்னமோவென்று கேட்காமலிருந்தேன். ரூபாயிருக்கும்பொழுது என்ன கஷ்டம் பணத்தை கொண்டுபோய் அவன் முகத்தில் எறியவேண்டியதுதான்.

துரை:—மணி 3-அடித்துவிட்டது நான்போய்வருகிறே னென்று எழுந்து கீழே இறங்கிவந்தான் தங்கமும் தெரு வரையில்வந்து ஒரு முத்தம் கொடுத்துவிட்டு உள்ளே வந்தாள்.

கிழவி:— "என்னடி தங்கம் முதலெடுப்பிலேயே 10000-ரூபாய் வருகிறது.'

தங்கம்:—"கைக்கு வந்தாலல்லது நிச்சயமில்லை"

கிழவி:—"அவனுக்கு பெண்சாதி இருக்கிறாள் நம் முடைய எண்ணத்தின்படி வந்தகாசுக்கு வட்டமில்லை யென்றபடி உருவிக்கொள்ளவேண்டியதுதான்.

---

## இரண்டாவது அத்தியாயம்.

முறுநாட்காலையில் துரைசாமி தங்கத்தின் மேலேயே ஞியாபகத்துடன் படுக்கையை விட்டெழுந்தான். காலைக் கடனைமுடித்துக்கொண்டு காபி சாப்பிட உட்கார்ந்தான்.

விசாலாக்ஷி:—'நேற்று 3-மணி வரையிலுமா சாமி தெரிசனம் செய்தீர்கள்.

துரை:—"அதை யெல்லாம் ஒன்றும் கேட்காதே காபியை வைத்துவிட்டு அப்புறம்போ"

விசா:—(மனவருத்தத்துடன்) "தங்களுக்கு உடம்பு ஏதேனும் அசௌக்கியமா எப்பொழுதும் இதுமாதிரி யாக பேசினதில்லையே"

துரை:—வீண்வார்த்தைகள் வேண்டாம் போவென்றால் உடனே போய்விடு, என்று கடுகடுப்பாகச் சொன்ஞன்.

விசாலாக்ஷி மனமுடைந்து ஒருபக்கமாக சென்று கண்களில் ததும்பிய கண்ணீரை துடைத்துக்கொண்டு இதுவரையிலும் காதலோடு சந்தோஷமாக இருந்த நம் கணவனுக்கு இப்பேர்ப்பட்ட மனக்குறை வந்ததற்குகாரணம் என்ன என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். துரைசாமி சாப்பிட்டுவிட்டு உடுத்திக்கொண்டு வேகமாக வெளியே போய்விட்டான். விசாலாக்ஷிக்கு ஒன்றும் தோன்றவில்லை. மத்தியானம் விசாரிப்போமென்று பேசாமலிருந்துவிட்டாள்.

வெளியே சென்ற துரைசாமி முத்தியாலுபேட்டை பவழக்காரத் தெருவிற்கு போனுன். ரொக்ககடை வைத்திருக்கும் முத்தையா செட்டியாரிடம்போய் தன்னுடைய வீடுகளில் மூன்று வீடுகளை காட்டி 10000 ரூபாய் கடன் கேட்டான் செட்டியாரும். பத்திரங்களை சோதித்துப் பார்த்து, அடமானபத்திரம் எழுதிக்கொண்டு ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குப்போய் ரிஜிஸ்டர் செய்துக்கொண்டு ரூபாய்-10000 எண்ணி அவன்கையில் கொடுத்தான் துரைசாமி பணத்தைப் பெற்றுக்கொண்டு வீடுசேர்ந்து சாப்பாட்டிற்குஉட்கார்ந்தான், விசாலாக்ஷியும் சாப்பாடு பரிமாரிவிட்டு,

"தங்களுக்கென்ன என்பேரில் அவ்வளவு கோபம் எனக்குத் தெரிந்து நான் ஒருதப்பிதமும் செய்யவில்லை? என்னையும் அரியாமல் செய்துவிட்டிருந்தால் தாங்கள் மன்னித்துக்கொள்ளக்கூடாதா?

துரை:—வீண்பேச்சு பேசவேண்டாமென்று சொல்லவில்லையா? உன் காரியத்தைப் பார்த்துவிட்டு பேசாமல்போ" என்று சற்பத்தைப்போல சீறிவிட்டு உடுத்திக்கொண்டு வெளியே புறப்பட்டுவிட்டான்.

புறப்பட்டவன் நேராக தங்கத்தின் வீடுவந்து சேர்ந்தான். பணமோ! என்று வாயைப் பிளந்துக்கொண்டிருந்த தங்கமும் எதிர்கொண்டோடிவந்து கைலாகுகொடுத்து அறைக்கு அழைத்துக்கொண்டு போனாள், கட்டிலின்மீது உட்காரவைத்து சேர்த்து அணைத்துக்கொண்டாள். அணைக்கும் பாவனையாகவே சட்டைப்பையைத் தடவிப்பார்த்தாள். பணம் வந்திருக்கிறதென்று தெரிந்துக்கொண்டாள். முகம்மலர்ந்தது துரைசாமியை அணைத்தணைத்து முத்தமிட்டாள்.

தங்கம்:—"தங்களைக்காணாத ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாக இருந்தது. தாங்கள் எத்தனைதரம் நாக்கை கடித்துக்கொண்டீர்கள்?

துரை:—"இல்லையே"

தங்கம்:—எத்தனை தடவை தங்களை திட்டிக்கொண்டேன். ஆசை காட்டிவிட்டு போய்விட்டீர்கள். என்னால் தங்களைப் பிரிந்திருக்க முடியவில்லை. முகமெல்லாம் வியர்வைசொட்டுகிறதே பணத்திற்கு ரொம்பவும் ஶ்ரமப்பட்டீர்களா? நிலம் போனால்போகிறது அதற்காகவா இவ்வளவு ஶ்ரமப்படவேண்டும்.

துரை:—ஶ்ரமம் ஒன்றுமில்லை பாங்கிற்குப் போய் வந்தேன் "என்று சொல்லிக்கொண்டேபணத்தை எடுத்துக்கொடுத்தான். தங்கம் பணத்தை கையில் வாங்கிக்

கொண்டு'' உண்ணபாடா? தின்னபாடா? தண்டத்திற்கு அந்தப்பாவிக்கு பணத்தை கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. இந்த 10000-ரூபா யிருந்தால் உடம்பெல்லாம் நகைகள்செய்து போட்டுக்கொள்ளலாம்?

துரை:— என்ன பிரமாதம் செய்துக்கொண்டால் போகிறது. சாயந்திரம் உம்மிடி ராமையசெட்டிகடைக்கு போவோம்.

தங்கம்:—ஏது? தங்களுக்கு என்மேல் அவ்வளவுதயவும் விஸ்வாசமும் ஏற்பட்டுவிட்டது? அதுவும் என்னுடைய பாக்கியந்தான்''

மணி 3 அடித்தது. கிழவி அறையினுள் வந்து, ''என்னடீ மணி ஆய்விட்டது தம்பிக்கு 'காபி' தயார் செய்யவேண்டாமா? சீக்கிரம் வா'' என்றாள், தங்கம் துரைசாமியின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு வெளியில் வந்தாள். ஹாலில் ''கிருஷ்ணன்'' ''ஆறுமுகம்'' என்னும் இரண்டு கமிஷன் ஏஜெண்டுகள் வந்திருந்தார்கள். தங்கம் அவ்விடம் வந்ததும் கிருஷ்ணன் அவளைப்பார்த்து என்ன தங்கம் ஒரு கொழுத்த கிராக்கி வந்திருக்கிறது. வயிறுரொம்பிவிடும். இன்றையதினமே நடந்துவிடவேண்டும்.

தங்கம்:—''இன்றையதினம்தான் ஒருகேஸ் மாட்டிக்கொண்டிருக்கிறது, இரண்டு அல்லது மூன்றுநாள் கழித்துப் பார்க்கலாம்''

கிருஷ்ணன்.—முடியாது கை மாறிவிடும். அப்புறம் திரும்புவது ரொம்பவும் கஷ்டம்.

தங்கம்:—பார்ப்போம் சாயந்திரம் ஆறுமணிக்கு மேல் சொல்லுகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஆறுமுகத்

தினிடத்தில் ஏதோ ரகசியமாக சொல்லி 100 ரூபாய் நோட்டைக் கொடுத்தாள். சிறிது நேரத்திற் கெல்லாம் 4 புட்டி உஸ்கி ஒரு கூடை பழவகைகள் பிஸ்கட்டுகள் முதலியவைகளெல்லாம் வந்துவிட்டது. கிழவியும் ஓட்டலிலிருந்து 'காபி' பலகாரங்கள் கொண்டுவந்து விட்டாள். தங்கம் 'காபியை' எடுத்துக்கொண்டு துரைசாமியிருந்த அரைக்குப்போய்விட்டாள். துரைசாமி சாப்பிட்டுவிட்டு தங்கத்தினிடம் ஷாப்பிற்கு போவதற்குதயாராக இருக்கும்படி சொல்லிவிட்டு வெளியே போனான.

அவன் போனவுடன் இவர்கள் நால்வரும் சுற்றி உட்கார்ந்துக்கொண்டு புட்டிகளை திறந்தார்கள். நால்வரும் நான்கு புட்டிகளை வாயில்வைத்து உள்ளதை யெல்லாம் இழுத்து விட்டார்கள். 10-நிமிஷங்களுக்குள் தில்லானு, மோடி, இந்துஸ்தான், சங்கீதம் முதலியவைகள் கிளம்பி விட்டன.

நமது துரைசாமி நேரே தன்வீடுவந்து மனைவியிடமும் பேசாமல் உள்ள பத்திரங்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு பழைய செட்டியாரிடம்போய் 3-வீடுகளைகாட்டி 10000-ரூபாய் பெற்றுக்கொண்டு தங்கத்தின்வீட்டிற்கு வந்தான். அவ்விடம் நடக்கும் வைபவங்களில் இவன் வந்ததுகூட அவர்கள் கவனிக்கவில்லை. தங்கம்மாத்திரம் சற்று சமாளித்துக்கொண்டு அவனை உள்ளே அழைத்துச்சென்றாள்.

துரை:—என்ன ரொம்பவும் சந்தடியாக இருக்கிறது?

தங்கம்:—சிறித்துக்கொண்டே என்தாயாரினுடைய தங்கை பிள்ளைகள் எனக்கு அண்ணன் முறையாகவேண்டும். தங்களைப் பார்க்கவேண்டுமென்றே வந்திருக்கிறார்

கள்' என்றுள் இதற்குள் அவர்களும் உள்ளே வந்தார்கள்.

கிருஷ்ணன்:—குட்ஈவினிங் சார் Good Evening Sir தங்களை பார்க்கவேண்டுமென்று வந்தோம். தாங்கள் உள்ளே வந்ததை கவனிக்கவேயில்லை ரொம்பவும் எக்ஸ்யூஸ் (Excuse) செய்யவேண்டியது.

துரை:—அதற்கென்ன சார் பாவாயில்லை நீங்களிருவரும் காபி சாப்பிட்டீர்களா? கொஞ்சம் சாப்பிடுங்கள் ஓட்டலிலிருந்து கிழவியைகொண்டுவரச் சொல்லுகிறேன்.

ஆறுமுகம்:— இப்பொழுதுதான் பிரதர் சாப்பிட்டோம். ஆனால் தங்களுடைய கோரிக்கையை மறுப்பதற்கிஷ்டமில்லை. கொண்டுவரச் சொல்லுங்கள்.

கிழவிக்கு ஆர்டர்செய்யப்பட்டது. காபியும் வந்துவிட்டது. சாப்பிட்டுவிட்டு தமாஷாக பேசிக்கொண்டிருந்தார்கள். மணியும் 4-அடித்தது. துரைசாமியும் தங்கமும் ஷாப்பிற்குபோக புறப்பட்டார்கள். கிருஷ்ணன் வண்டி கொண்டுவந்துவிட்டான். இருவரும் வண்டியில் 'ஏரிக் கொண்டுபோய் விட்டார்கள். கிழவி மிகுந்திருந்தவற்றையெல்லாம் குடித்துவிட்டு புரண்டுக்கொண்டிருந்தாள். கிருஷ்ணனும் ஆறுமுகமும் காகிதப் பாக்கை எடுத்துக்கொண்டு அவுட் ஆட்டம் ஆட உட்கார்ந்துக்கொண்டார்கள்.

ஷாப்பிற்கு போன தங்கம் நல்ல உறுவான நகைகளாக 8000-ரூபாய்க்கு எடுத்துக்கொண்டாள். பக்கத்திலிருக்கும் "செலராம் செயின் செண்டு" ஷாப்பிற்குப் போய் 1000-ரூபாயிக்கு புடவைகள் வாங்கிக்கொண்டாள் பிறகு வண்டியேரி வீடுவந்து சேர்ந்தார்கள், மீதியாயிருக்

கும் 1000-ரூபாயிற்கு என்ன சிலவு வைப்பதென்று தங் கத்திற்கு தெரியவில்லை.

வீடுவந்துசேர்ந்ததும் கிழவி "தம்பி சாப்பாட்டுக்கு நேரமாய்விட்டது நம்பவீட்டு சாப்பாடு உனக்கு பிடிக் காதே ஓட்டலிலிருந்து கொண்டுவரச் சொல்லட்டுமா?

தங்கம்:—"எல்லாம் சாப்பிடுவார் நம்வீட்டில் சாப் பிடமாட்டேனென்று சொன்னாரோ? இதற்குள்ளாக காஞ் சிவாத்து உபசாரணை செய்கிறாய்.

கிழவி:—இல்லடியம்மா சாப்பிடுவாரோ என்னமோ என்று சொன்னேன் இதற்குள்ளாக கோபம் வந்து விடு கிறதே.

என்று சொல்லிக்கொண்டே சமயல் செய்யப்போய் விட்டாள். மிலிட்டேரி சாப்பாடும் தயாராகிவிட்டது, புட்டிகளும் வந்துவிட்டன. துரைசாமி சாப்பிட உட்கா ர்ந்தான். தங்கம் சாப்பாடு ஊட்டினாள். துரைசாமிக்கு எவ்வளவு சாப்பிட்டோமென்று தனக்கே தெரியவில்லை. தண்ணீருக்குபதிலாக உஸ்கியை வார்த்துக்கொடுத்தாள். துரைசாமிக்கு என்ன சாப்பிடுகிறோமென்று தெரிய வில்லை. இதற்குமுன் குடித்து பழக்கமில்லை யானதால் வெறி அதிகமாக ஏறிவிட்டது. கையை கழுவிக்கொண்டு படுக்கையில் படுத்துக்கொண்டான்.

தங்கம்மாள் சாப்பிட்டுவிட்டு நகைகளை யெல்லாம் பூட்டிக்கொண்டு உயர்ந்த புடவையை கட்டிக்கொண்டு பக்கத்துவீடு எதிர்வீடு மூன்றாவது வீடு இப்படி வீடு வீடாக ஏறி ஏதோவேலையாக போகிறவள்போல தன்னு டைய நகைகளையும் வனப்பையும் காட்டிக்கொண்டு வந்

தாள். இதைப்பார்த்த மற்றவர்கள் அந்த மைனர் தன் வீட்டிற்கு வரவில்லையே என்று வயிற்றில் இடித்துக் கொண்டார்கள். 10-மணிக்குவந்து துரைசாமியை தட்டி எழுப்பினாள். அவனும் எழுந்து உட்கார்ந்து அம்மாளுடையவனப்பில் மூழ்கி மோகத்தால் கட்டுப்பட்டு தத்தளித்தான் தங்கமும் அவன் மனம் கோணாமல்படி சுரத லீலைகளைக் காட்டினாள்.

---

## மூன்றாவது அத்தியாயம்.

மறுநாட் காலையில் துரைசாமி எழுந்து உட்கார்ந்தான் இன்னும் குடிவெறி தெரியவில்லை. சட்டைப் பையை தடவிப்பார்த்தான் ஒரு பைசாகூட இல்லை. தள்ளாடி எழுந்து வீட்டிற்கு போய் வருவதாக தங்கத்தினிடம் விடைபெற்றுக்கொண்டு, ஜெட்காவண்டியேரி வீடு வந்து சேர்ந்தான். அவனுடைய அருமைமனைவி இறவெல்லாம் அவனைக் காணாது வருந்தி அவன் வரவையே எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தாள். துரைசாமியைக்கண்டவுடன் தாயையிழந்த கன்றுபோலோடி வந்து உள்ளே அழைத்துச்சென்றாள்.

துரைசாமியின் வாயிலிருந்து கிளம்பும் நாற்றம் இவளுடைய நாசித்துவாரங்களில் பிரவேசித்தது. அப்பொழுது இவளுக்குண்டான துக்கத்திற்கு அளவேயில்லை. காபி பலகாரங்கள் கொண்டுவந்து வைத்தாள். துரைசாமி அதை தின்றுக்கொண்டிருந்தான். விசாலாக்ஷிகண்

களில் நீர்த்ததும்ப, "நாதா" தாங்கள் இத்துற்கிருத்தியங்களை கைக்கொண்டது நீதியா? எந்தப்படுபாவி தங்களுக்கு இதைக் கற்றுக்கொடுத்தான்? எல்லோருக்கும் புத்திசொல்லும் தன்மையையுடைய நீரே இதை கைக்கொள்ளலாமா? அரைக்ஷணமேனும் தங்களை விட்டுபிரிய மனமில்லாத இந்த அடியாளிருக்க ஒருபரஸ்திரீயை தாங்கள் கைப்பற்றலாமா. தாசிகளின் நேசத்தினால் எத்தனையோ சமஸ்தானங்கள் அழிந்துபோய்விட்டன. எத்தனையோ கொலைசெய்யப்பட்டு மாண்டார்கள். தங்களுக்கு எல்லாம் தெரிந்திருந்தும் இத்துற்நடத்தையைக் கைக்கொள்ளலாமா? கோலவாரு R. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் எழுதப்பட்ட "மதருவின் மர்மம்" என்னும் நாவலை தாங்கள் 4-தினங்களுக்கு முன்புதானே படித்தீர்கள். அதில் விபசாரத்தினாலுண்டாகும் கொலைகளைத் தாங்கள் கவனிக்கவில்லையா! வேண்டாம்? ஏதோ ஒருமுறை தவறிவிட்டாலும் இனிமேல் அக்காரியங்களுக்குப் பிரவேசிக்காதீர்கள்" என்று கல்லுங் கரையும்படியாக சொன்னாள்.

துரைசாமிக்கு ஒன்றும் காதில் விழவில்லை. யாரைப்போய் பணம் கேழ்ப்பதென்கிற ஒரே நோக்கத்திலிருந்தான். தங்கத்தின் ஞாபகம் இவனைவிட்டகலவில்லை. சாப்பிட்டானதும் உடுத்திக்கொண்டு மனைவி என்னசொல்லியும் கேளாமல் வெளியேவந்து நேராக வேறு ஒரு செட்டியாரிடம்போய் 50000 ரூபாய் கடன் கேட்டான் செட்டி பத்திரங்களையெல்லாம்பார்த்துவிட்டு, "தம்பி! உன்னிஷ்டப்பிரகாரம் ரூபாய் கொடுக்கிறேன். ஆனால் எனக்கு பணம்கொடுக்கவேண்டுமென்கின்ற பயம் உனக்கிருக்கவேண்டும். ஆனதால் லட்சரூபாயிற்கு எழுதிக்

கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் 50000 ரூபாய் கொடுப்பேன். நீ பணம் திருப்பிக்கொடுக்கும்போது 50000-ரூபாயும் அதற்குண்டான வட்டியும்தான் கொடுக்கவேண்டும்'' என்றார்.

துரைசாமி:—"வட்டி எப்படி?''

செட்டி:—வட்டி என்ன எல்லோரும் ரூபாய் கணக்கில் வாங்குகிறார்கள் எனக்கு அவ்வளவு ஆசையில்லை ஒரு தம்படிக்கு தம்படி கொடுத்தால்போதும்.

துரை:—"அப்படியே ஆகட்டும்'' என்றான் உடனே இரண்டு லட்ச ரூபாயிற்கு நோட்டு எழுதி துரைசாமியினிடம் நீட்டினான். துரைசாமி படித்துப்பார்த்துவிட்டு "இரண்டுலட்சத்திற்கு எழுதியிருக்கிறதே? என்று கேட்டான்.

செட்டி:—அதற்கென்ன தம்பீ? பணம்செலுத்தும்போது 50000 தான் செலுத்தவேண்டும் ஒன்றும் யோசிக்காதே கையெழுத்துப்போடு'' துரைசாமி கையொப்பமிட்டான். செட்டியார் 25000 ரூபாயை எண்ணி துரைசாமியின் கையில் கொடுத்து, தம்பீ! பணம் முடையாக இருக்கு இதை வைத்துக்கொள். நாளைய பதினொருமணிக்கெல்லாம் மிச்சபணத்தை கொடுத்துவிடுகிறேன்'' என்றான்.

துரைசாமி சரியென்று பணத்தை பெற்றுக்கொண்டு தங்கத்தின் வீடுவந்து சேர்ந்தான்.

தங்கம்மாள் துரைசாமிக்கு உபசாரம் செய்து அழைத்துக்கொண்டுபோய் கட்டியணைத்து முத்தமிட்டாள்

[stamp] ...600 008.

சட்டைப்பையில் பணமிருப்பதை தெரிந்துகொண்டாள் புன்சிறிப்பு சிறித்து "காலையிலிருந்து இதுவரையில் என்னசெய்தீர்கள்"?

துரை:—"ஒருவர் எனக்கு பணம் தரவேண்டும் அதற்காக போயிருந்தேன்" "இழவி எங்கே காணோம்."

தங்கம்:—"அவங்களா? கோபம் வந்துவிட்டது"

துரை:—"ஏன் கோபம் வந்துவிட்டது"

தங்கம்:—"எனக்குமாத்திரம் நகைகள் வாங்கிக்கொடுத்தீர்களாம், அந்தம்மாளுக்கு வாங்கித்தரவில்லையாம், தங்களுடைய மாமியாரென்று சொல்லிக்கொள்வதற்குகூட வெட்கமாயிருக்கிறதாம்"

துரை:—இதுதானு பிரமாதம், இதோ 2000-ரூபாய் நகைகள் வாங்கிக்கொள்ளச்சொல்" என்று 2000-ரூபாய் கொடுத்தான். தங்கம் அதை வாங்கிக்கொண்டுபோய் பெட்டியில் பத்திரப்படுத்திவிட்டாள். கிருஷ்ணனும் ஆறுமுகமும் வந்துவிட்டார்கள். துரைசாமியைப் பார்த்து "என்ன பிரதர் பார்ஸீ கம்பெனியில் குலேபகாவலி நாடகம் ரொம்பவும் நன்றாக இருக்கும் போவோமா?" என்று கேட்டார்கள். துரைசாமி தங்கத்தைப் பார்த்தான், தங்கமும் தலையசைத்தாள். நாடகத்திற்கு போவதென்று தீர்மானித்தார்கள்.

மணியும் 4-அடித்தது 5-30 மணி ஆட்டமானதால் எல்லோரும் புரப்பட்டுவிட்டார்கள். கிருஷ்ணன் வண்டி கொண்டுவரப் போனுன், எல்லோரும் வாயிலில் காத்துக்கொண்டிருந்தார்கள், வண்டிவர கொஞ்சம் நேரமாயிற்று,

ஆறுமுகம்:—சத்தவண்டி வைத்துக்கொண்டிருந்தால் நமக்கு கட்டாது பிரதர்; கூட்டயம் ரொம்ப வேண்டாகின்றது.

துரை,—"ஆமாம், ஒரு குதிரையும் வண்டியும் வாங்கிவிடவேண்டியதுதான்"

ஆறு:—அதற்கென்ன நாளைபதினமே வாங்கிவிடுவோம் இங்கு ஒரு இடத்தில் விற்பனைக்காக குதிரைவண்டி இருக்கிறது குதிரை 4500-ரூபாயும் வண்டி 2500-ரூபாயும் ஆகிறது அநேகபேர்கள் வைத்திருக்கிறார்கள், நாளைய தினமே நாம்போய் வாங்கிவிடவேண்டும்" என்றான் இதற்குள் வண்டியும் வந்துவிட்டது எல்லோரும் ஏறிக்கொண்டார்கள். மூர்மார்கெட்டுக்கு பக்கத்தில் நூதனமாக அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

துரைசாமி கிருஷ்ணனிடம் ரூபாய் கொடுத்து சீட்டு வாங்கிவரச்சொன்னான். சீட்டு வாங்கிக்கொண்டுவந்ததும் எல்லோரும் உள்ளே சென்றார்கள். நாடகமும் விமரிசையாக நடந்தது. கொட்டகையிலுள்ள ஆடவர்களின் கண்களெல்லாம் தங்கத்தை நோக்கின, நாடகம் நடந்துக்கொண்டே இருக்கும்பொழுது, கிருஷ்ணன் தங்கத்தை கண்ஜாடையால் வெளியே வரும்படி சொன்னான். தங்கமும் வெளியில் போய்வருவதாக துரைசாமியிடம் சொல்லிவிட்டு வெளியில் வந்தாள்.

கிருஷ்ணன்:—"தங்கம்! ஒரு கிராக்கி வந்திருக்கிறது ஒரே நாளையில் 500-ரூபாய் கிடைக்கிறது. இன்றைய தினமே வாவேண்டுமென்கிறான் என்னசொல்லுகிறாய்? சீக்கிரம் சொல்"

தங்கம்---“இன்றைக்கு முடியாது துரைசாமியை என்னசெய்கிறது?

கிருஷ்ணன்:—ஏதாவது சாக்குபோக்கு சொல்லி நாளைபதினம் வரும்படியாக சொல்லியனுப்பு.

தங்கம்:—கையில்பணம் வைத்துக்கொண்டிருக்கிறார் அதைத்தட்டிக்கொள்ளாமல் எப்படி அனுப்பிவிடுகிறது? பார்ப்போம் வீட்டிற்குபோனபிறகு”

கிருஷ்ணன்:—எப்படியாவது ஒருகைபார் 500-ரூ. வருகிறது, என்று சொல்லிவிட்டு போய்விட்டான் தங்கமும் துரைசாமியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். 10-மணிக்கெல்லாம் நாடகம் முடிந்தது எல்லோரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

தங்கம்மாள் துரைசாமிக்கு சாப்பாடு வட்டித்தாள். தண்ணீருக்கு பதிலாக சாராயத்தை ஊற்றிக்கொடுத்தாள். துரைசாமியும் அவளுடைய சரசத்திலீடுபட்டு கொடுக்கும் சாராயத்தையெல்லாம் நெட்டிக்கொண்டேயிருந்தான். மயக்கம் அதிகமாகிவிடவே கையை சுத்தம் செய்துக்கொண்டு படுக்கையில் படுத்துவிட்டான். தங்கம் அவனுடைய மயக்கத்தை சோதித்துவிட்டு கிருஷ்ணனிடம் வந்து “என்ன கிருஷ்ணா! நீ சொன்ன ஆசாமியைக்கொண்டுவா. கைமேல் பணம் வருவதாயிருந்தால் பார் இல்லாவிட்டால் வேண்டியதில்லை.

கிருஷ்ணன்:—ரூபாய் கைமேல் வந்துவிடும் ஐந்து நிமிஷங்களில் வந்துவிடுகிறேன்” என்று சொல்லி விட்டு வெளியே போனான்.

அரைமணி நேரத்திற்குள்ளாக கதவுமெல்ல தட்டப்பட்டது. கிழவி ஓடி கதவைத் திறந்தாள். கிருஷ்ண

னும் அவனுக்கு பின்னல் எமதர்ம ராஜனைப்போன்றொரு மனிதனும் நுழைந்தார்கள் வந்த ஆசாமியோ அமாவாசை இருட்டு கையிலிருந்த மோதிரங்களும், காதிலணிந்திருந்த கடுக்கனும் ஜொலித்தன. தங்கம் எதிர்கொண்டு போய், "வாருங்கள், தங்களுடைய கால் பட்டமாத்திரத்தில் எங்களுடைய வீடு சுகிர்தமடைந்தது" என்று சொல்லிக்கொண்டே துரைசாமி படுத்திருக்கும் அறைக்கு பக்கத்திலிருக்கும் இன்னொரு அறைக்கு அழைத்துக்கொண்டு போனள்.

வந்தவர்:—"இந்த அறைரொம்பவும்புழுக்கமாயிருக்கிறது அடுத்த அறைக்கு போய்விடுவோமே"

தங்கம்:—ஊரிலிருந்து என்னுடைய சகோதரர் வந்திருக்கிறர்- அவர் நித்திரையை ஏன் பங்கம்செய்யவேண்டும். காற்று வேண்டுமானல் நான் விசிறியினல் வீசுகிறேன். என்று வெண்சாமரம் போட ஆரம்பித்தாள். ஐயாவிற்கு ரொம்பவும் ஆனந்தமாய் விட்டது.

தங்கம்:—"நாடகம் முடிந்தவுடன் கோராகவருகிறதுதானே, என இவ்வளவுநேரம் ஆலஸ்யம்? தங்களை அநேகமுறை பார்த்திருக்கிறேன். தங்கள்மீது எனக்கு அபிப்பிராயந்தான்· ஆனல் தாங்கள் பணக்காரர். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதைப்போல நான் பிரயத்தனப்பட்டு என்ன பிரயோஜனம் என்று பேசாமல் இருந்துவிட்டேன் தெய்வானுகூலமாக தாங்களே வந்துவிட்டீர்கள்?

வந்தவர்:—"இதற்குமுன்பே என்னை தெரிந்துவைத்திருக்கிறயோ?"

தங்கம்:—தெரியாமலென்ன தங்களை வெகு நாட்களாக தெரியும்.

வந்தவர்:— "என் பெயர் என்ன சொல் பார்ப்போம்?"

தங்கம்:—ஐயையோ ஆண்பிள்ளைகளின் பெயரைச் சொல்வது பாபமல்லவோ? என்று சொல்லி சிறித்தாள் அவரும் சொக்கிவிட்டார். சட்டைப் பையில் கையைப் போட்டு ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து தங்கத்தின் கையில் கொடுத்து "இதை சிலவிற்கு வைத்துக் கொள்" என்றார். தங்கமும் அதைப்பெற்றுக்கொண்டு ரூபாய் கொடுத்தது ஒரு பெரியகாரியமல்ல, தங்களுடைய அன்பு என்னைவிட்டுப்பிரியாமலிருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு துரைசாமியை கவனிக்கப்போனாள் அவனும் அப்பொழுதுதான் கொஞ்சம் மயக்கம் தெளிந்து புரண்டுக்கொண்டிருந்தான் தங்கம் அவனுக்குஉபசரணை செய்து மயக்கம் தெளியாமலிருப்பதற்காக ஒரு கிண்ணத்தில் சாராயத்தை ஊற்றிக்கொடுத்தாள். அவனும் அதை கெட்டிவிட்டு மயக்கத்திலாழ்ந்தான்.

தங்கம் புதியதாக வந்தவரிடம்போய் சயனித்துக் கொண்டாள். மணியும் 12-அடித்தது கதவுதட்டும் சத்தம்கேட்டது. தங்கம் ஜாடையாக அதை தெரிந்துக் கொண்டு மெல்ல எழுந்து வந்து கதவைத் திறந்தாள் ஆறுமுகம் உள்ளே வந்தான்.

175083

தங்கம்:—'என்ன சமாசாரம்?'

ஆறு:— 'தங்கம்! ஒரு கொழுத்த கிராக்கி செட்டியார் ஒருவரை கொண்டுவந்திருக்கிறேன். பலத்த ஆசாமி

500-ரூபாய் கிடைக்கும் இன்று தவறினல் முடியாது என் னசொல்லுகிருய்?

தங்கம்:—இப்பொழுது இருவர் இருக்கிருர்கள். இன் னும் ஒருவர் என்ருல் வேறு அறைகூடகிடையாது சமை யலறை ஒன்று தான் பாக்கி இருக்கிறது. பரவாயில்லே கொண்டுவா ஒரு கை பார்ப்போம்” என்று சொல்லி அனுப்பிவிட்டு, மெதுவாக கிழவியை எழுப்பி சமாசாரத் தைச் சொன்னுள், கிழவியும் குதூகலத்துடன், சமைய லறையிலுள்ள சாமான்களை யெல்லாம் அப்புறப்படுத்தி விட்டு படுக்கையை போட்டாள். இதற்குள்ளாக ஆறுமுக மும் செட்டியாரும் வந்துவிட்டார்கள். தங்கம் செட்டியா ருக்கு உபசாரம்செய்து, அறைக்கு அழைத்துக்கொண்டு போனுள். செட்டியாரும் தரையில் போட்டிருக்கும் படுக் கையில் உட்கார்ந்தார்.

தங்கம்:—“தாங்கள் ஏன் இவ்வளவு நேரங்கழித்து வந்தீர்கள்? சீக்கிரமாக வரப்படாதா? தாங்கள் வருவது தெரிந்திருந்தாலும் ஏதாவது பலகாரங்கள் வாங்கிவைத் திருக்கலாம்.

செட்டி:—“பரவாயில்லே, தின்பண்டம் இல்லாவிட் டால் ஒன்றும் குறைந்து போகாது. என்ன இந்த அறை யில் ஜன்னல்கூட இல்லேயே காற்று எப்படிவரும்?

தங்கம்:—“காற்றுக்கென்ன? நான்வீசுகிறேன், தங் களேப்போல மேதாவிகளுக்கு ஊழியம் செய்வதற்கல்லா மல் வேறு எதற்காக இச்சரீரத்தை சுமந்துக்கொண்டிரு க்கிறேன்? என்று சொல்லிக்கொண்டே அவர்மேல் விழுந் து அணைத்துக்கொண்டாள். செட்டியாரும் மெய் மறந் தார்.

இவர்கள் இப்படியிருக்க, முன் பக்கத்து அறையி லிருந்தவர் வெகுநேரம் காத்திருந்துவிட்டு தங்கம்! தங் கம்!! என்று கூப்பிட்டார், கிழவி உடனே அந்த அறை யின் வாயிற்படியண்டைபோய் "தங்கத்தையா கூப்பிடுகி றீர்கள்?" என்று சிறித்துக்கொண்டே கேட்டாள், அதற் கவர் "ஆமாம் வெகு நேரமாகிவிட்டதே காணோமே" என்றார்.

கிழவி:—(சிறித்துக்கொண்டே) "தங்களிடம்சொல் ல வெட்கப்பட்டுக்கொண்டு சொல்லாமல் வந்துவிட்டாள் அவளும் ரொம்பவும் விசனப்படுகிறாள். என்ன செய்கி றது, பாழாப்போன வீட்டு விலக்கம் நாளைக்கு வரக்கூ டாதா" என்று பசப்பினாள்.

பாபம் அவரை வருத்தம் ஒரு பக்கமும் வெட்கம் ஒரு பக்கமும் மூடிக்கொண்டன. ஐந்நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு மூன்று நாட்கள் காக்கவேண்டியதா யிற்றே என்று மனம் சோர்ந்து படுக்கையில் சாய்ந்துவிட் டார். மணி 4-அடித்ததும் எழுந்து கிழவியிடம் மூன்று தினங்கள் கழித்துவருவதாக சொல்லிவிட்டு போய்விட் டார். கிழவியும் ஒரு சனியன்விட்டதென்று கதவை சாத்திக்கொண்டு படுத்துவிட்டாள்.

தாசியென்றால் இவளல்லவோதாசி. ஒரேயிரவில்மூவ ரை மூன்று அறைகளில் வைத்து பணத்தை பறித்தாள். ஆனால் இது எவ்வளவோமேல், இன்னும் எவ்வளவோ நடக்கின்றது. அவைகளெல்லாம் நமக்கேன்? வீண்கதை வேண்டியதில்லை?

## நான்காவது அத்தியாயம்.

மாதங்கள் பலசென்றன. துரைசாமி தன்தகப்பனார் சேகரித்துவைத்த வீடுகளையும் நிலங்களையும் அடகுவைத்தும் விற்றும் தங்கத்திற்கு அர்ப்பணம் செய்துக்கொண்டிருந்தான். அவன் மனைவியாகிய விசாலாட்சியும், தன் கணவனுக்கு எவ்வளவோ புத்திசொல்லி கேளாமல் மனமுடைந்து தனிமையாயிருப்பது சரியல்லவென்று அரக்கோணத்திலிருக்கும் தன் தாய்தந்தையர்களிடம் போய்ச் சேர்ந்தாள்.

விசாலாட்சி போய்விட்டது துரைசாமிக்கு சனியன் விடுதலையானதுபோலிருந்தது. தங்கம்மாளும் துரைசாமியை ஏமாற்றி பணத்தை பிடுங்கி குதிரைப்பந்தயத்தில் தோற்றுக்கொண்டிருந்தாள்.

ஆனிமாதம் வந்தது, கிருஷ்ணனும், ஆறுமுகமும் ஆனித்திருமஞ்சனத்திற்கு சிதம்பரம் போகவேண்டுமென்று தங்கத்தை தூண்டினார்கள். தங்கமும் துரைசாமியைத் தூண்டினாள். அவனும் சம்மதிக்க போவதென்று தீர்மானித்தார்கள், துரைசாமி சிலவிற்கு பணம் வேண்டுமே யென்று யோசித்தான். முன்பு செட்டியிடம் இரண்டு லட்சம் ரூபாயிற்கு எழுதிக்கொடுத்து 25000 ரூபாய் வாங்கிக் கொண்டதும் மிச்சம் 25000 ரூபாயிற்கு மறுதினம் வரும்படியாக சொன்னதும் இப்பொழுது ஞாபகம் வந்தது, உடனே புறப்பட்டு நேராக பவழக்காரத் தெருவிற்குப் போனான். செட்டி அகப்படவில்லை. குமஸ்தாக்களை விசாரித்ததில் வெளியூருக்குப்போயிருப்பதாக தெரியவந்தது.

பணத்திற்கு வேறுவழியொன்றும் அகப்படவில்லை. ஒரு சௌகாரிடம் தான் குடியிருக்கும் வீடாகிய லக்ஷ்மிவிலாசத்தை காட்டி 10000-ரூபாய் கடன் வாங்கினன்.

துரைசாமியிடம் 10000-ரூபாய் இருப்பதைக் கண்டதும் தங்கத்திற்கு அளவிலா ஆனந்தம் உண்டாயிற்று அவனை அணைத்துக்கொண்டு "சொல்லாமல் கூட எங்கே போனீர்" என்று கேட்டாள்.

துரை:—சிலவிற்கு பணம் கொண்டு வருவதற்காக பாங்கிக்குப் போயிருந்தேன்.

தங்கம்:— காலை வண்டிக்கு புறப்படவேண்டியது தானே? சாமான்கள் சேகரிக்கவேண்டும்.

துரை:—என்னென்ன சாமான்கள் வாங்கவேண்டும் என்று கேட்டான். தங்கம் புடவை வேண்டும் வெள்ளி கூஜாவேண்டும், அது வேண்டும், இதுவேண்டுமென்று சுமார் 2000-ரூபாயிற்கு சிலவு காட்டினுள் அன்றையதினமே எல்லாம் வாங்கப்பட்டது.

மறுதினம் காலையில் எல்லோரும் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்கள். கிருஷ்ணனும் ஆறுமுகமும் கூட வந்திருந்தார்கள். முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கிக் கொண்டு பிளாட்பாரத்தினுள் வந்தார்கள். பிளாட்பாரத்திலுள்ள பிரயாணிகளெல்லோரும் தங்கத்தை பார்த்தவுடனே இவள் பூவுலகத்துமாதோ அல்லது தேவலோகத்து பெண்ணோ? என்று சந்தேகித்தார்கள்.

டிக்கட்டு கொடுக்கும் புகிங்கிளர்க்கு தங்கத்தை பார்த்தபடியே கூடுவாஞ்சேரிக்கு கேட்பவர்களுக்கு கடலூ

ருக்கும், மதுரைக்கு கேட்பவர்களுக்கு மாய்வரத்திற்கும் கொடுத்துக்கொண்டிருந்தான், ஸ்டேஷனில் கடை வைத்திருப்பவன் தங்கத்தின்மேல் நோக்கமாக சோடா கேட்பவர்களுக்கு கலரும், கலர் கேட்பவர்களுக்கு சோடாவும், கொடுத்துக்கொண்டு சங்கிலியில் கட்டி தொங்கவிட்டிருக்கும் மணியை ஆட்டுவதும் அவள் திரும்பிப் பார்க்கும்பொழுது மீசையை முறுக்கிவிடுவதுமாக இருந்தான் சில மைனர்கள் உறத்த குரலில் ஆங்கிலத்தில்பேசுவதும் அவள் திரும்பிப் பார்க்கிறாளாவென்று மெதுவாககடைக் கண்ணால் பார்ப்பதுமாக இருந்தார்கள். அவ்விடம் பீட் செலுத்தும் போலீஸ் ஜவான் பிரயாணிகளை "அப்படிப் போகக்கூடாது இப்படிபோகவேண்டும்" இப்படிப்போகக்கூடாது அப்படிப் போகவேண்டும் என்று துரத்துவதும் தள்ளுவதுமாக தன் அதிகாரத்தை செலுத்திக்கொண்டிருந்தான். பெருத்த தொந்தியையுடைய ஒருவர் கோட்டு, மூக்குக்கண்ணாடி, பூட்ஸ் முதலியவைகளை அணிந்தவராய், தன்னுடைய கெம்பீரமான சரீரத்தையும் ஒய்யார நடையையும் பார்த்து மெச்சிக்கொள்ளவேண்டுமென்று பின்புரம் கைகளை கட்டிக்கொண்டு மேலே பார்த்தவராய், ஒய்யாரமாக அங்தும் இங்கும் உலாவிக்கொண்டிருந்தார். ஒரு மைனர் தன்னுடைய முடுக்கைப்பார்த்து மெச்சிக்கொள்ள வேண்டுமென்று தன் கைகளை வீசிக்கொண்டு அவசரமாக போகிறவரைப்போல் வேகமாக நடந்தார். தரையில் விழுந்துகிடந்த வாழைப்பழத்தின் தோல் சறுக்கி மல்லாக்காக கீழே விழுந்தார்.

வண்டியும் வந்துநின்றது துரைசாமி, தங்கம், கிழவி ஆறுமுகம், கிருஷ்ணன் ஆகிய இவர்கள் ஐவரும் முதல் வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள், இன்னும்

முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கிய மைனர்களெல்லாம்வேறு வண்டி காலியிருந்தும்கூட இவர்கள் ஏறினவண்டியிலேயே ஏறினார்கள். ஒரு ஐயர் இவள் எந்தவண்டியில் ஏறியிருக்கிருளென்று தேடிக்கொண்டே வந்தார். இவள் முதல்வகுப்பிலிருப்பதைப்பார்த்து புகிங் ஆபீஸுக்குபோய் மூன்றும் வகுப்பு டிக்கட்டை கொடுத்துவிட்டு முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கிக்கொண்டு இவர்கள் இருக்கும் வண்டியிலேறி ஜன்னலின் ஓரமாக தங்கத்தின் எதிரில் உட்கார்ந்தார்.

வண்டியும் புறப்பட்டது. ஐயர் மந்தரஸ்தாயியில் ராகம் இழுப்பதும் தொடையின்மேல் தாளம் போடுவதும் ஜாடையாக தங்கத்தைப் பார்ப்பதுமாக இருந்தார். தங்கமும், அவருடைய வைரக்கடுக்கனையும் தோடாவையும், ஆடம்பரத்தையும் பார்த்து எப்படியாவது கையிலுள் போடவேண்டுமென்று எண்ணங்கொண்டாள், அவருடைய இருப்பிடத்தையும் கையிருப்பையும் எப்படி தெரிந்துக்கொள்வதென்று யோசித்தாள், அவரைப்பேசும் படியாகச் செய்யவேண்டுமென்று "வெய்யிலடிக்கின்றதே ஜன்னலை மூடிவிடக்கூடாதோ? காலை வெய்யில் உடம்பிற்கு ஆகாதே என்றாள். ஐயர், "பரவாயில்லை எப்பொழுதும் நிழலிலே இருந்தால் ஒருநாளாவது வெய்யலில் காயவேண்டாமா" என்று சொல்லி சிறித்தார்.)

துரை:—(சிறித்துக்கொண்டே) காலை வெங்யில்ரொம்பவும் பாட் (Bad)

ஐயர்:—(ஜன்னலை பாதிமூடிவிட்டு) நீங்கள் காஞ்சிவரம் போகிறீர்களா?

தங்கம்:—இல்லை சிதம்பரம்போகின்றோம், தாங்கள்?

ஐயர்:—நானும் சிதம்பரந்தான் போகின்றேன்.

துரை:— தங்களுடைய நேடிவ் பிளேஸ் (Native Place) மதருஸ்தானு?

ஐயர்:—ஆமாம்?

தங்கம்:—நானும் தங்களை எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறது, ஆனல் சரியாக கியாபகமில்லை.

ஐயர்,—நான் மைலாப்பூரிலிருக்கிறேன் வெட்கிட்டு ஐயர் என்று கேள்விபட்டிருப்பீரே. நான் சங்கீத உபாத்தியாயர்.

கிருஷ்ணன்:—ரொம்பவும் நல்லதாயிற்று நம்வண்டியிலேயே ஒரு சங்கீத வித்வான் இருக்கிறார். சிதம்பரம் போகும் வரையில் சங்கீதத்திற்கு குறைவில்லை, ஒருபாட்டு பாடுங்கோ என்றான். ஐயரும் பாட வாயைத்திறந்து விட்டார். வாயைக் கோணிக்கொண்டும் தலையை ஆட்டிக்கொண்டும் தாளம்போட்டு வெகு கஷ்டப்பட்டு பாடினர். துரைசாமி சங்கீதத்தில் விருப்பமுள்ளவனுகையால் ரொம்பவும் கவனமாக கேட்டுக்கொண்டிருந்தான். கிருஷ்ணனுக்கும், ஆறுமுகத்திற்கும், சங்கீதமென்றால் நீளமாக பாடுவதா அல்லது குட்டையாக பாடுவதா என்று தெரியாது, தில்லானு, தெம்மாங்கென்றால் ரொம்பவும் பிரியம் ஐயர் எப்பொழுது வாயை மூடுவாரென்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஐயர் பாடுவது கிழவிக்கு தூக்கம் வரவில்லை, மனதிலேயே அவரை திட்டிக்கொண்டிருந்தாள். தங்கம் பாட்டைக் கேட்கும்பாவனையாக ஐயரைப்பார்த்து புன் சிறிப்பு சிறித்துக்கொண்டிருந்தாள். ஐயரும் தன் கோரிக்கையை கண்களினுல் தங்கத்திற்கு தெரிவித்

தார், இவளும் கண்களினாலேயே தன் சம்மதத்தை தெரிவித்தாள், ஐயருக்கு ஆனந்தம் பொங்கிவிட்டது, மேலும் மேலும் பாட ஆரம்பித்துவிட்டார்

ஆறுமுகம்:— சாமி! அந்தபாட்டை நிருத்துங்கோ வேறு திருபுடை ராகத்திலே ஒரு பாட்டு பாடுங்கோ?

ஐயர்:—திருபுடை ராகமென்று ஒரு ராகம் கிடையாது திருபுடை யென்பது தாளத்தின்பெயர்,

ஆறுமு:—"ஓகோ! அப்படியா அதில்தான் பாடுங்கோ" என்றான், வண்டியும் செங்கல்பட்டு ஸ்டேஷனில் வந்து நின்றது வண்டி யேறுவதற்குவந்திருந்த பிரயாணிகளெல்லாம் இதே வண்டியிலோ பிரியப்பட்டார்கள். முதல்வகுப்பு வண்டியாயிருப்பதைப்பார்த்து விசனமடைந்தார்கள்.

ஸ்டேஷனில் ஒரு சிறுவன் மாம்பழம்விற்றுக்கொண்டிருந்தான், தங்கம், துரைசாமியைப் பார்த்து "மாம்பழம் வாங்கிக்கொள்ளலாமாவென்று கேட்டாள். இதற்குள்ளாக ஐயர் அச்சிறுவனை கூப்பிட்டு "பழம் என்னவிலை", என்று அதிகாரத்துடன் கேட்டார்.

சிறுவன்:—"பழம் ஒன்று ஒண்ணரையணா"

ஐயர்:—"அடபயலே! டஜன் என்ன விலை சொல்லு?

சிறுவன்:—"டஜனா? அந்த கணக்கு எனக்கு தெரியாது. சரி 2 ரூபா குடுத்துடுங்கோ" என்றான். ஐயரும் சட்டைப்பையிலிருந்து 2 ரூபாயை கொடுத்து 12-பழங்களை எடுத்துக்கொண்டார். வண்டியும் புறப்பட்டது. ஐயர் பழங்களை எல்லோருக்கும் பங்கிட்டுக்கொடுத்தார்.

5

எல்லோரும் வேண்டாம் வேண்டாமென்று பிருவுடனே வாங்கி சாப்பிட்டார்கள்.

தங்கத்துடன் இவர்கள் மூவரும் வந்திருப்பது ஐய ருக்கு ரொம்பவும் இடஞ்சலாக பிருந்தது. எப்படியா வது சிதம்பரத்தில் தன் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார்.

---

## ஐந்தாவது அத்தியாயம்,

மாலை 5-மணிக்கு வண்டியும் சிதம்பரம் வந்து நின் றது. எல்லோரும் வண்டியை விட்டிறங்கி ஒரு ஜட்கா வண்டி யமர்த்திக்கொண்டு அதில் ஏறினார்கள் ஐயர் எல் லோரையும் ஏற்றிவிட்டு "கோயிலருகிலிருக்கும் சத்திரத் தில்போய் இறங்குங்கள், நான் சாப்பிட்டுவிட்டு அங்கு வந்து உங்களை சந்திக்கிறேன் என்றார்.

துரை:—"தாங்களும் நேராக சத்திரத்திற்கு வாருங் கள். அவ்விடம் போஜனம் கிடைக்காதோ?

தங்கம்:—ஆமாம் தாங்களும் நேராக ஒட்டலுக்கு வாருங்கள். நாங்கள் முன்பின் தெரியாமல் இவ்வூருக்கு வந்திருக்கிறோம். தங்களுக்கு பழக்கமுண்டு. தாங்களும் வந்தால் எங்களுக்கு ஒத்தாசையாக இருக்கும்" என்றாள் ஐயரும் "நீங்கள்போய்ச் சேறுவதற்குள் நான் வந்துவிடு கிறே"னென்று சொல்லிவிட்டு, வேறு வழிபாகபோனார் போகும்பொழுது, தங்கம் தன்னுடைய மனோபீஷ்டத்

யை தீர்ப்பதற்காகத்தான் வரச்சொன்னதாக நினைத்து வெகு ஆனந்தத்துடன் போனார்.

மணி 8-அடித்தது, இவர்களெல்லோரும் இறங்கியிருந்த சத்திரத்தின் பக்கத்திலுள்ள ஒட்டலில் சாப்பிட்டு விட்டு சத்திரத்தில் படுத்துக்கொண்டார்கள். சிறிது நேரத்திற்குள் ஐயரும் வந்துசேர்ந்தார். வந்ததும் துரைசாமியைப்பார்த்து "சாப்பாடாயிற்றோ?" என்று கேட்டார்.

துரை:—"ஆயிற்று"

தங்கம்:—"என்னசாமி? இந்த சத்திரத்தை காட்டினீர்கள் இவ்விடம் மூட்டப்பூச்சி அதிகமாக இருக்கிறது"

ஐயர்:—"என்செய்கிறது? நாளையகாலையில் வேறு இடம் பார்த்துக்கொள்வோம். ராப்பொழுது இங்கு தள்ளவேண்டியதுதான். எல்லோரும் படுத்துக்கொள்ளுங்கள் நேரமாகிறது" என்றார். எல்லோரும் படுத்துக்கொண்டார்கள். யார் யார் எங்கெங்கு படுத்துக்கொள்ளுகிறார்கள் என்று ஐயர் கவனித்தார். துரைசாமி தங்கத்தை நடைத்திண்ணையில் படுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு இவர்களெல்லோரும் வெளித்திண்ணையில் படுத்துக்கொண்டார்கள். பார்த்தார் ஐயர் நடையில் இவளைத்தவிர வேறொருவரும் இல்லை எப்படியாவது ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதானென்று தீர்மானித்துக் கொண்டு, கடைத்தெருவிற்குப்போனார்.

தங்கம் கொஞ்சநேரம் புரண்டுப்பார்த்தாள். ரொம்பவும் புழுக்கமாகயிருந்தது. எழுந்து வெளித்திண்ணைக்குவந்து இவர்களோடு படுத்துக்கொண்டாள். ஒருகிழவி எங்கும் இடம் கிடைக்காமல் தேடிக்கொண்டே வந்து

நடைத்திண்ணை காலியாயிருப்பதைக் கண்டு படுத்துக் கொண்டாள். படுத்ததும் அயர்ந்து தூங்கிவிட்டாள்.

மணி 11-இருக்கும் ஐயர் கையில் தின்பண்டங்களுடன் வந்தார். எல்லோரும தூங்குவதை யறிந்து சந்தடி செய்யாமல் நடைக்குவந்து திண்ணையை தடவிப்பார்த்தார். கிழவியை தங்கமென்று நினைத்து மெதுவாக தட்டினர் ஒன்றும் பதில் இல்லை மெதுவாக "எழுந்திரு எல்லோரும் தூங்கிவிட்டார்கள் இதுதான் சமயம்" என்றார் ஒன்றும் பதில் இல்லை. "இப்பொழுதுதானு விளையாடுவது மணி 11-அடித்துவிட்டது எழுந்திரு இதோ தின்பண்டங்கள் கொண்டுவந்தேன் சாப்பிடு என்று சொல்லி மறுபடியும் தட்டினன், ஒன்றும் பதில் இல்லாமையைக் கண்டு "இவள் வெட்கப்படுகிறாள்" என்றுநினைத்துமேலே விழுந்தார்.

விழுந்ததுதான் தாமதம். கிழவி ஓ! என்று அலறினள். ஐயருக்கு உடல் நடுக்கமெடுத்துக்கொண்டது. சத்திரத்தில் படுத்திருந்த எல்லோரும் விழித்துக்கொண்டார்கள். ஐயர் தின்பண்டங்களை யெல்லாம் போட்டு விட்டு வெளியே ஓடிவந்தார் வழியில் ஒருவன் படுத்துக்கொண்டிருந்தான். இருட்டில் தெரியவில்லை. ஓடிவந்த வேகத்தில் கால் இடரி குப்புறவிழுந்தார். தூங்கிக்கொண்டிருந்தவன் அலரி எழுந்து திருடன்! திருடன்!! என்று ஐயருடையகாலை பிடித்துக்கொண்டான். சத்திரம் முழுதும் குழப்பமுண்டாய்விட்டது எல்லோரும் எழுந்து வந்து ஐயரைப் பிடித்துக்கொண்டுநையப் புடைத்தார்கள். ஐயர் அடிவாங்கினதற்கு வருந்தப்படவில்லை. தங்கம்என்னமதிப்பாள் வெட்கக்கேடாகிவிட்டதே யென்று விசனித்தார்.

இதற்குள்ளாக போலீஸ்ஸேவகர் இருவர்வந்துவிட்டார்கள். விளக்கை ஐயருடைய முகத்தருகில் காட்டினார்கள். துரைசாமி, தங்கம் இவர்களெல்லாம் ஐயரைப்பார்த்ததும் ஆச்சரியப்பட்டு, என்னசாமி தங்கள் பெரிய வேடிக்கை செய்துவிட்டீர்கள்? என்றார்கள்.

ஐயர்:— "படுத்துக்கொள்ளலாமென்று வந்தேன், இருட்டில் கால் இடறி விழுந்தேன்' என்று தலை குனிந்தபடியே சொன்னார். போலீஸ்வீரர்கள் சிறித்தார்கள். துரைசாமி சேவகர்களுக்கு சமாதானம்சொல்லி யனுப்பிவிட்டான், தங்கம் மாத்திரம் ஐயர் எதற்காக வந்து விழுந்தார் என்பதை யூகித்துக்கொண்டாள்.

பொழுது விடிந்தது. எல்லோரும் கோயிலுக்குபோனார்கள். கோயிலுக்கு வந்திருந்த ஆடவர்களெல்லாம் ஸ்வாமி தெரிசனத்தைக்கூட மறந்து தங்கத்தின்மேல் கண்ணாயிருந்தார்கள்' தங்கமும் தன்னுடைய கண்களாகிய வலையை ஆடவர்களின்மேல் வீசிக்கொண்டிருந்தாள். வெங்குட்டு ஐயர் எல்லோரும் மெச்சிக்கொள்ளும்படி திருவருட்பா பாடினார். தெரிசனம் தீர்ந்ததும் சத்திரம் வந்து சேர்ந்தார்கள்.

சாப்பிட்டானதும் இளைப்பார படுத்துக்கொண்டார்கள். துரைசாமி இரவெல்லாம் கண்விழித்த அலுப்பினால் அயர்ந்து தூங்கிவிட்டான். ஐயர் தங்கத்தை நடைக்கு வரும்படி. ஜாடை காட்டினார். அவளும் மெதுவாக நடைக்குவந்து "எவ்வளவு பிரியமிருந்தபோதிலும் மனதினுள்ளேயே யிருக்கவேண்டாமா? பகலிலேயே ஜாடைசெய்து கூப்பிடுகின்றீர்கள், யாராவது பார்த்தால் என்ன நினைத்துக்கொள்வார்கள்?

ஐயர்:—எல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கிறார்களே யார் பார்க்கப் போகிறார்கள்?

தங்கம்:—இப்பொழுது என்ன சமாசாரம் ஏன் கூப்பிட்டீர்கள்?

ஐயர்:—ஒன்றுமில்லை இன்றைய இரவு.........?

தங்கம்-—இன்றைய இரவு எப்படி முடியும். சத்திரத்தில் ஏராளமாக ஜனங்கள் நிறைந்திருக்கிறார்கள். யாராவது பார்த்துவிட்டால் என்னசெய்கிறது?

ஐயர்:—மாடியில் ஒரு தனி அறை ஏர்ப்பாடு செய்கிறேன். அங்குபோய் விடுவோம்' என்றார் தங்கமும் சம்மதித்தாள். ஐயர் சத்திரக்காவர்க்காரனிடம்போய் இன்றைய இரவு தனியாக ஒரு அறை தனக்கு வேண்டுமென்று கேட்டான். அவன் சம்மதித்து ஐயரிடம் ஒரு ரூபாய் பெற்றுக்கொண்டான்.

இரவு 10-மணியாயிற்று ஐயர் மெதுவாக தங்கத்தை கவனித்தார். அவள் அவரை அறைக்குப்போயிருக்கும்படியாக ஜாடைசெய்தாள். ஐயரும் மாடியிலிருக்கும் அறைக்குச்சென்று விளக்கை அணைத்துவிட்டு காத்துக்கொண்டிருந்தார், தங்கம் கிருஷ்ணனை கூப்பிட்டு எல்லா சமாசாரத்தையும் சொல்லி அவனிடம் ஒரு சேலையைக் கொடுத்தாள். அவன் அதைக் கட்டிக்கொண்டு முகம் தெரியாமல் முக்காடிட்டு மாடிக்குச் சென்று அறையினுள் போனான்.

ஐயர் இருட்டில் இவனைத் தங்கமென்று நினைத்துக் கொண்டு குதூகலமடைந்து "எல்லோரும் தூங்குகிறார்களா? என்று கேட்டார். கிருஷ்ணனும் "ஆம்" என்று

சொல்லுவதற்கு பதிலாக தலையை அசைத்தான். ஐயர் அவன் கையைப்பிடித்து இழுத்து உட்காரவைத்து "அப்பா] இரண்டு தினங்களாக உன்னால் நான் அடைந்த மனோ வேதனையை என்னென்று சொல்லுவேன்! இனிமேல் நாம் இருவரும் உயிருள்ளவரையிலும் பிரியாமலிருக்கவேண்டும், சென்னையிலேயே ஒரு தனிவீடு அமர்த்திக்கொண்டு இருந்துவிடுவோமென்று சொல்லிக்கொண்டு அவனை கட்டியணைத்தான். கிருஷ்ணன் ஐயருடைய கழுத்தில் கைவைத்து ஒரு அழுத்து அழுத்தினான். ஐயருக்கு உடல் நடுக்கமெடுத்துக்கொண்டது. கிருஷ்ணன் "வாயைத்திரந்தால் மண்டையை உடைத்துப்போடுவேன். என்று கன்னத்தில் ஒரு அறை அறைந்தான். பாபம் ஐயர் "வாயைத்திறக்கவில்லை. கிருஷ்ணன் அவரிடத்திலிருக்கும் நகைகளையும் ரூபாயையும் பிடுங்கிக்கொண்டு" வாயைத்திரந்தாலும்சரி அல்லது யாரிடமாவது சொன்னாலும்சரி பட்டணம்போய்ச் சேரமாட்டாய் என்று பயமுறுத்தி அவரை இழுத்துக்கொண்டுவந்து படிகளினருகில் நிருத்தி ஒரு உதைவிட்டான். ஐயரும் படிகளை ஒவ்வொன்றாக இறங்கும் கஷ்டமின்றி சுலபமாக கீழேவந்து சேர்ந்தார். உடம்பெல்லாம் நல்ல காயம் பட்டுவிட்டது. அவர்பாடு அம்மட்டோடு விட்டால் போதுமென்றாய் விட்டது?

மறுபடியும் எங்கே உதை விழுகிறதோ என்று தட்டுத் தடுமாறி எழுந்து தெருத்திண்ணையில் வந்து தான் வைத்த மூட்டையைத் தடவிப்பார்த்தார். அவர் மூட்டைக்குப்பக்கத்தில் அதேமாதிரியாக இன்னொரு மூட்டையிருந்தது. அதை தன்னுடையதென்று நினைத்து கையில் எடுத்துக்கொண்டு ரயில்வேஸ்டேஷனை நோக்கி ரொம்பவும்வருத்தத்துடன்போய்க்கொண்டிருந்தார். சத்திரத்தில்

படுத்திருந்த மூட்டைக்கு சொந்தக்காரன், மூட்டையைக் காணுமல் யாரோ எடுத்துக்கொண்டுபோய் விட்டார்கள் என்று ஸ்டேஷனை நோக்கி ஓடிவந்தான் ஐயருடைய கையில் தன்னுடைய மூட்டை யிருப்பதைப்பார்த்து அவரைப்பிடித்து மூட்டையை பிடுங்கிக்கொண்டு ஒரு உதை விட்டான் ஐயர் அவ்வுதையை தாங்கமாட்டாமல் தட்டுத் தடுமாரி பக்கத்திலிருந்த வெட்டுப்பள்ளத்தில் விழுந்தார்.

நகைகளை யெல்லாம் பிடுங்கிக்கொண்ட கிருஷ்ணன் தங்கத்தினிடம் வந்து நகைகளைக் கொடுத்துவிட்டு ரூபாயைத்தான் எடுத்துக்கொண்டு எதாவது சாராயக்கடை திறந்திருக்குமாவென்று தேடிக்கொண்டுவந்தான். ஐயர் பள்ளத்திலிருந்து எழுந்திருக்க முடியாமல் அங்கேயே கிடந்தார். கிருஷ்ணன் பள்ளத்தில் ஐயர் விழுந்துகிடப்பதைப்பார்த்து பரிதாபப்பட்டவனைப்போல் "சாமி! தாங்களா? உமக்கென்ன இப்பேர்ப்பட்ட கதிவந்தது" என்று சொல்லிக்கொண்டே அவரை தூக்கிவிட்டன. ஐயர் தடுமாற்றத்துடன் எழுந்து நின்று "கிருஷ்ணு! என்னுடைய கதியை என்னென்று சொல்லுவேன் சத்திரத்திலிருந்து ஸ்டேஷனுக்கு வந்துக்கொண்டிருந்தேன் திருடர்கள் மடக்கி எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு இந்தப்பள்ளத்தில் தள்ளிவிட்டார்கள்" என்று சொல்லி விசனித்தான். கிருஷ்ணனும் பரிதாபப்பட்டவனைப்போல் அபினயித்து பக்கத்திலிருந்த ஒருவீட்டின் திண்ணையில் உட்காரவைத்தான். அவ்வீட்டிலுள்ளவர்கள் தச்சவேலை செய்கிறவர்களாதலால் ஒருபலகையை வேரொரு பலகையோடு ஒட்டவைப்பதற்காக வஜ்ஜிரத்தை பலகையில் தடவி திண்ணையின்மேல் ஆரவைத்திருந்தார்கள். இருட்டானதால் ஐயர் கவனிக்காமல் அதன்பேரில் உட்கார்ந்தார்.

சிறிதுநேரம் இளைப்பாறின பிறகு கிருஷ்ணன் 'சாமி ஸ்டேஷனில் படுத்திருந்துவிட்டு காலையில் அவர்களுடன் போய் கலந்துக்கொள்வோம். போனது போய்விட்டது என்ன செய்கிறது'' என்று சொன்னான். ஐயர் மெல்ல எழுந்தார் பலகையும் கூட எழுந்தது. கிருஷ்ணனுக்கு சிரிப்புவந்து விட்டது. அதை அடக்கிக்கொண்டு பலகையின் மற்றொரு பக்கத்தைப் பிடித்திழுத்தான் வரவில்லை பலகை விட்டுவிடலாமென்றாலோ இவனுடைய கையும் ஒட்டிக்கொண்டது. ஐயர் ஒருபக்கமும் கிருஷ்ணன் ஒரு பக்கமும் பலமாக இழுத்தார்கள். ரொம்பவும் கஷ்டப்பட்டு பலகையினின்றும் விடுபட்டார்கள்.

இருவரும் ஸ்டேஷனுக்குப்போய் படுக்க இடம் தேடினார்கள். ஒருபக்கத்தில் இடம் இருக்கக்கண்டு படுத்துக் கொண்டார்கள். விடிந்தவுடன் கிருஷ்ணன் ஐயரை எழுப்பி "சாமி சத்திரத்திற்கு போவோமா?

ஐயர்:—நீ போ? நான் அப்புறம் வருகிறேன்.

கிருஷ்ணன்:—நாம் இருவருமேபோவோம்.

ஐயர்:—வேண்டாம் நீ போ நான் வருகிறேனென்று சொல்லியனுப்பிவிட்டு சினேகிதரொருவரிடம்போய் கொஞ்சம் ரூபாய் கடன்வாங்கிக்கொண்டு பட்டணம்போகத் தீர்மானித்தார்.

கிருஷ்ணன் நேராக சத்திரத்திற்குவந்து தங்கத்தினிடமும் ஆறுமுகத்தினிடமும் நடந்தவைகளை யெல்லாம் பெருமையாக சொல்லிக்கொண்டான். அவர்களும் அவனுடைய சாமர்த்தியத்தை மெச்சிக்கொண்டார்கள். மணி 7-அடித்ததும் துரைசாமி படுக்கையை விட்டெழுந்தான்

தங்கம் துரைசாமி யிடம் வந்து அது வாங்கிக்கொண்டு போகவேண்டும் இது வாங்கிக்கொண்டு போகவேண்டு மென்று பேசிக்கொண்டிருந்தாள் கிருஷ்ணன் ஆறுமுக த்தையும் கிழவியையும் சாராயக்கடைக்கு அழைத்துக் கொண்டு போனான் எல்லோரும் வயிருகொண்டமட்டும் குடித்துவிட்டு தெருவில் ஆடிக்கொண்டே வந்தார்கள். கிழவி குடிவெறியில் ஒன்றும் தோன்ருமல் தெருவில் போகிறவர் வருகிறவர்களை யெல்லாம் சண்டைக்கிழுத் துக்கொண்டிருந்தாள்,

''கடைசியாக காபி சாப்பிட ஒரு ஓட்டலைச் சேர்ந் தார்கள். உள்ளே போனவுடன் ஆறுமுகம்: ''ஐயரே என் ன இருக்கு என்று கேட்டான்.

ஐயர்:—இட்லி, வடை, தோசை காபி சூடாக இரு க்கு,

கிருஷ்ணன்:—ஓய்! ராமாயணமாதிரி படிக்கிருயே? ஒண்ணு ஒண்ணுசொல்லு.

ஐயர்:—''என்னகாணும்! கார்த்தாலே தண்ணியோ'

ஆறுமுகம்:—அடே பாப்பான்! எங்களை குடிக்காரர் என்றுநினைத்தாயோ? என்று சொல்லிக்கொண்டே வேக மாக ஐயரை அடிக்க ஓடினான். ஓடினவன் வழியிலிருந்த உரல்தடுக்கி கிருஷ்ணன்மேல் விழுந்தான். கிருஷ்ணன் கிழ வியை இடித்துக்கொண்டு பக்கத்தில் கட்டப்பட்டிருந்த பசுவின் பின்பக்கம்போய் விழுந்தான் குப்புற விழுந்ததி ஞல் முகத்தை சாணம் மூடிக்கொண்டது இடிபட்ட கிழவி சமாளித்து நிற்கமுடியாமல் பக்கத்திலிருந்த தண்ணீர் தொட்டியில் விழுந்தாள்.

இதற்குள்ளாக ஆறுமுகம் எழுந்து "அடே எங்கள் மூவரையும் அடித்து சாய்த்ததில் நீ பெரிய வீரனாய்விட்டாயோ? வா ஒரு கைபார்க்கலாமென்று சொல்லிக்கொண்டே கூரையில் சொருகப்பட்டிருந்த தடியை இழுத்தான், தடிக்குப் பக்கத்திலிருந்த ஒரு கிழிந்த செருப்பு இழுத்தவேகத்தில் அவன் தலைமேல் விழுந்தது. கையில் தடியுடன் பின்பக்கம் திரும்பி "யார்ரா? என்னை செருப்பால் அடித்தது? பேடிபயலே எதிரிலிருந்தல்லவோ அடிக்கவேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே தடியை சுழற்றினான், மேலேமாட்டி தொங்கவிடப்பட்டிருந்த குலோப்பில் தடபட்டு குலோப்பு உடைந்து தலைமேல் விழுந்தது. விழுந்த வேகத்தில் இவனுக்கு மயக்கம் வந்துவிட்டது. கீழே விழுந்துவிட்டான் இதற்குள்ளாக கிருஷ்ணன் எழுந்து ஆத்திரத்துடன், அடே! எலும்பு உடைந்துவிடும் என்று ஆத்திரத்துடன் சொல்லிக்கொண்டே பசுவின் மேல் சாய்ந்தான். பசு ஒரு உதைவிட்டது. அதை வாங்கிக்கொண்டு தடுமாற்றத்துடன் எழுந்து கிழவியைத் தூக்கினான் ஆறுமுகம் மெல்ல எழுந்து இன்னும் அவ்விடம் இருந்தால் உதை அதிகமாகவிழும் என்று பயந்து கிருஷ்ணனையும் கிழவியையும் இழுத்துக்கொண்டு வெளியே வந்து விட்டான்.

வெளியேவந்த மூவரும் நேராக சத்திரத்திற்கு போனார்கள். தங்கமும் துரைசாமியும் இவர்களைக் காணாது தேடிக்கொண்டிருந்தார்கள். இவர்களைக் கண்டதும் தங்கம் ஆறுமுகத்தைப் பார்த்து, எங்கே போயிருந்தீர்களென்று கேட்டாள், ஆறுமுகம் நடந்தவற்றையெல்லாம் சொல்ல, அவள் இவர்களுடைய மடமைத் தனத்திற்காக

சிறித்தாள். அன்று மாலை வண்டியில் பட்டணம்போக புறப்பட்டு ஸ்டேஷனை யடைந்தார்கள். வண்டியும் வந்து விட சீட்டு வாங்கிக்கொண்டு வண்டியில் ஏறினார்கள். மறு நாட்காலை 5-மணிக்கு சென்னைவந்து சேர்ந்தார்கள்.

## ஆருவது அத்தியாயம்.

2-அல்லது 3-மாதங்கள் சழிந்தன. துரைசாமியின் பூஸ்திதி பூராவும் சிலவழிந்து கொஞ்சம்தான் மிச்சமி ருந்தது. தங்கம் அதையும் அபகரிக்க வழிதேடிக்கொண் டிருந்தாள். ஒருநாட்பகல் துரைசாமி சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டிருந்தான். தங்கம் அவனிடம் வந்து சிறிதுநேரம் விளையாட்டாக பேசிக்கொண்டிருந்துவிட்டு திடீரென்று வெட்கப்பட்டவள் போல தலையை சாய்த்துக் கொண்டு "இத்தனை காலமாகியும் நமக்கு குழந்தை உதி க்கவில்லையே அதுவே எனக்கு பெரியகுறையா யிருக்கி றது" என்றாள்.

துரை:—"குழந்தை இல்லாவிட்டாலென்ன குழந்தை யிருந்தால் பெரிய சள்ளைத்தானே?

தங்கம்,— குழந்தையில்லாத வீடு குட்டிச்சுவருக்கு சமானமல்லவா? மேலும் குழந்தையில்லாதவர்களுக்கு பரகதி இல்லையென்று பெரியோர்கள் சொல்லவில்லையா? என்றாள். இதையெல்லாம் மறைந்து கேட்டுக்கொண்டிருந் த கிழவியின்மேல் ஆவேசம் வந்துவிட்டது. வீடு அதிரும் படியாக குதித்தாள், கோவிந்தா! கோவிந்தா!! வென்று

கத்தினாள். தங்கம், துரைசாமி, ஆறுமுகம் முதலிய எல்லோரும் கூடத்திற்கு ஓடிவந்தார்கள். ஆறுமுகம் ஒரு தட்டில் கற்பூரத்தை ஏற்றிவைத்து 'யார் வந்திருக்கிறது'' என்று வணக்கத்துடன் கேட்டான், கிழவி "ஏழுமலையான்! ஏழுமலையான்!! என்று அதிகாரத்துடன் சொன்னாள்.

தங்கம்:—(ரொம்பவும் பயபக்தியுடன்) "எதற்காக வந்தாய் உனக்கு எதாவது குறையுண்டா?

கிழவி:—குறையா? நீ உன்நாயகன் மீதிலேயே ஞாபகமாயிருக்கிறாய். அவனும் உன்மீதிலேயே ஞாபகமாகயிருக்கிறான். உங்களுடைய சந்தோஷத்தில் என்னை ஒருபொழுதும் நினைப்பதில்லை. நாளைய சனிக்கிழமை எனக்கு பூஜைபோட்டு பொங்கலிடவேண்டும் இல்லாவிட்டால் உங்களை லேசில் விடமாட்டேன்.

தங்கம்:—(பக்தியுடன்) அப்படியே செய்கிறோம்?

கிழவி:—"நான் நம்பமாட்டேன் நீங்களிருவரும் சத்தியம் செய்யவேண்டும்'' என்றாள்?

துரைசாமியும் தங்கமும் சத்தியம் செய்தார்கள். தங்கம் கிழவியைப்பார்த்து "எங்களுக்கு ஒரு கோரிக்கையுண்டு அது எப்பொழுது நிறைவேறும்?'' என்று கேட்டாள்.

கிழவி:—(ஆடிக்கொண்டே) உங்களுடைய கோரிக்கை எனக்குத் தெரியாதா? உங்களுக்கு புத்திரப்பேரில்லையே என்கின்ற விசனம்'' என்றாள். தங்கமும் துரைசாமியும் ஒருவரை யொருவர் பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டார்கள். இருவரும் அஞ்சலி கூப்பி பயபக்தியுடன் "புத்திரசந்தானம் எப்பொழுது உண்டாகும்?''என்று கேட்டார்கள்,

கிழவி:—நீங்கள் அதற்கு ஒரு பரிகாரம்செய்யவேண்டும். அதாவது 200-சவரன்களில் குழந்தைபோல் ஒரு உருவம்செய்து வயது சென்ற ஒரு பெரிய ஆத்மாவுக்கு தானம் செய்து அவருடைய ஆசீர்வாதத்தை பெறவேண்டும். அப்பொழுது தான் பிள்ளைபிறக்கும், என்று சொல்லிவிட்டு கோவிந்தா! கோவிந்தா!! என்று கத்திக்கொண்டே மலையேறிவிட்டது, கிழவி கீழேவிழுந்தாள்.

சிறிது நேரங்கழித்து நித்திரையினின்று எழுந்திருப்பவளைப்போல எழுந்து "துரைசாமி யிடமும் தங்கத்திடமும் ஆத்திரத்தோடு" சாமி வந்ததே என்னசொல்லிற்று என்று ஒன்றும் தெரியாதவளைப்போல் கேட்டாள் துரைசாமி நடந்தவற்றை சொல்ல கிழவி ஆச்சரியப்பட்டவள் போல அபினயித்தாள். தங்கம் துரைசாமியைப்பார்த்து "200-சவரன்களில் உருவம் செய்யவேண்டுமே என்ன செய்கிறது? என்று கேட்டாள்,

துரை:—"அதற்கென்ன செய்துவிட்டால்போகிறது?

தங்கம்:—நம்முடைய கிழவியும் பெரிய ஆத்மாதானே? கிழவிக்கே தானம் செய்வோம்.

துரை:—அப்படியே செய்துவிடுவோமென்று சொல்லிவிட்டு அறையினுள் போய்விட்டான். ஆறுமுகம் தங்கத்தைப் பார்த்து "பார்த்தாயா கிழவினுடைய சாமர்த்தியத்தை?" என்று சொல்லி சிரித்தாள்.

வெள்ளிக்கிழமை வந்தது துரைசாமி மிகுதியாயிருக்கும் சொத்துகளையும் விற்று 200-சவரன்கள்வாங்கி ஒரு உருவம் செய்தான் மறுநாள் ஏழுமலையானுக்கு பொங்கலிட்டு பூஜைபோட்டார்கள். கிழவியைக் குளிப்பாட்டி உட்

காரவைத்து. துரைசாமியும், தங்கமும் பொன் உருவத்தை தானம்செய்து சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். கிழவியும் ஆசிர்வாதம் செய்தாள்.

ஷை சம்பவங்கள் நடந்து ஒரு மாதமாயிற்று, துரைசாமியினுடைய கடன்காரர்களெல்லாம் நோட்டீஸ்கொடுத்துவிட்டார்கள். துரைசாமி எல்லாவற்றையும் வாங்கிப் பார்த்தான், என்னசெய்வதென்று தோன்றவில்லை. தங்கம் ஆசாமி பாபர் ஆகி விட்டானென்று தெரிந்துக்கொண்டாள். அவனைத் துலைத்துவிட வழி தேடினாள். கடன்காரர்களும் சொத்துக்களை யெல்லாம் ஏலம்போட்டு எடுத்துக்கொண்டார்கள். துரைசாமியின் பாடு அம்பலத்தில் வந்துவிட்டது,

துரைசாமி ரொம்பவும் மனக்கலக்கத்துடன் தங்கத்தைப்பார்த்து "நகைகளை அடகுவைத்து 5000-ரூபாய் வாங்கி கொடு'' என்று சொல்லி தன்னிடமிருந்த கடுக்கன் வைரத்தோடா முதலியவைகளை கழற்றிக்கொடுத்தான் அவள் அதை வாங்கிக்கொண்டு வந்து பெட்டியில் வைத்துவிட்டு 3000-ரூபாய்களை எடுத்துக்கொண்டு துரைசாமியிடம் வந்து "அந்த நகைகள் 5000-ரூபாய் விலைபோகாதாம் அவற்றின்மேல் 3000-ரூபாய்தான் கொடுத்தார்கள்'' என்று சொல்லி ரூபாயை துரைசாமியிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கிக்கொண்டு, 1000 ரூபாய் வீட்டுசிலவிற்காக தங்கத்தினிடம் கொடுத்து விட்டு 2000-ரூபாயை வைத்துக்கொண்டான்.

ஒருவாரத்திற்குள்ளாக எல்லாம் சிலவாகிவிட்டது. துரைசாமியிடம் ஒன்றுமில்லையென்று தங்கம் தெரிந்துக்கொண்டாள். அவனிடம் வந்து "சிலவிற்கு ரூபா ஒன்று

யில்லை என்னசெய்கிறது?" பால் விற்பவனுக்கு 200-கொடுக்கவேண்டும், மிட்டாய்கடை ஐயருக்கு 400 கொடுக்க வேண்டும். இவற்றை யெல்லாம் நான் எங்கிருந்து கொடுப்பது? என்று கடுகடுப்பாக கேட்டாள்.

துரை:—என்னிடத்தில் பணம் ஒன்றும் கிடையாது யாரிடமாவது கடன் வாங்கிக்கொள்.

தங்கம்:—கடன் யார் கொடுக்கிறார்கள் என்னுடைய நகைகள் இருந்தாலும் அடகுவைக்கலாம். அவற்றையெல்லாம் என் சிறியதாயார் இரவல் வாங்கிக்கொண்டு காசிக்குப்போய்விட்டாள் அவள் வர 6-மாதங்கள் செல்லும் அதுவரையில் என்ன செய்கிறது?

துரை:—இப்பொழுது பணம் ஒன்றும் என்னிடம் இல்லை. யாரையாவது கடனாக கேட்டுப்பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியில் வந்தான் அவனுக்கு யாரைக் கடன் கேட்பதென்று தெரியவில்லை. சினேகிதர்களிடம் போனால் அவர்கள் இவனோடு பேசுவதும் கஷ்டமாக இருந்தது.

துரைசாமி மனமுடைந்து ஒன்றும் தோன்றாமல் தங்கத்தின் வீட்டிற்கு வரவும் வெட்கப்பட்டவனாய், நேராக சௌகார்பேட்டைக்குபோய் ஒரு சௌகாரிடம் 5000 ரூபாய் கடன் கேட்டான். அந்த சௌகார் நகையாவது வேறு சொத்தாவது இல்லாமல் கடன் கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டான்.

தங்கம், கிழவி, கிருஷ்ணன், ஆறுமுகம் ஆகிய இவர்களெல்லாம் ஒன்று கூடி துரைசாமியைத் தொலைத்து விட வழிதேடிக்கொண்டிருந்தார்கள்.

கிழவி:—இனிமேல் அவனால் நமக்கென்ன பிரயோஜனம்? இம்மட்டோடு இருத்தவேண்டியதுதான்.

ஆறுமுகம்:—சீக்கிரம் துலைத்துவிடு வேறு ஜோக்கி இருக்கிறது.

கிருஷ்ணன்:—துலைப்பதென்ன? கதவை மூடிவைத்து தட்டினாலும் திறவாமலிருந்தால் பார்த்துவிட்டுப் போகிறான், என்றான். இதற்குள்ளாக துரைசாமியும் வந்து சேர்ந்தான். தங்கம் அவனிடம்போய் சட்டைப்பையில் ஒன்றுமில்லையென்று தெரிந்துக்கொண்டு "செங்கல்பட்டில் எங்களுடைய பந்து ஒருவர் ரொம்பவும் காயலாவாக இருக்கிறாராம். நாங்கள் எல்லோரும் போகிறோம். நீங்கள் உங்களுடைய வீட்டிற்குப் போயிருந்து 10-அல்லது 15-தினங்கள் கழித்து வாருங்கள்! வருகிறவரையிலும் வீட்டைபூட்டி வைப்பதென்றால், வாடகை நஷ்டமாகிறதுவீட்டை காலிசெய்து சாமான்களை யெல்லாம்பக்கத்துவீதியில் ஒருவர் வீட்டில் போட்டுவிட்டுப் போகிறோம்" என்றாள் துரைசாமிக்கு என்னசொல்லுவதென்று தெரியவில்லை. தன் வீடுகளெல்லாம் போய்விட்டதென்று சொல்லவும் வெட்கப்பட்டான். வேறு எங்கு போயிருப்பதென்றும் தெரியவில்லை. பழய சமாசாரங்கள் ஒவ்வொன்றாக ஞாபகம் வந்தது. தங்கத்தினுடைய சூதுவாதுகள் இப்பொழுது தான் அவனுக்கு கொஞ்சம்தெரிந்தது. தங்கத்திற்குபதில் சொல்லாமல்கூட வீட்டைவிட்டு வெளியில்வந்தான், கையிலிருந்த சில்லரையில் இரண்டு நாட்கள் ஓட்டலில் சாப்பிடுவதும் பீபில்ஸ்பார்க் தோட்டத்தில் படுத்துக்கொள்ளுவதுமாக காலங் கழித்தான்.

தங்கம் திருவல்லிக்கேணியில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கிக்கொண்டு அவ்விடம் சேர்ந்துவிட்டாள். துரைசா

மிக்கு எல்லாம் தெரிந்தும் அவளிடம் போக வெட்கப்
பட்டு 3-தினங்கள் வரையிலும் பட்டினியாக கிடந்தான்.
அதற்குமேல் அவனால் வயிற்றுக்கு உத்தரவு சொல்ல
முடியவில்லை. வெட்கம் போனாலும் போகிறதென்று தங்
கத்தின வீட்டிற்கு வந்து மாடியின்மேல்போய் கதவைத்
தட்டினான். தங்கம் கதவைத்திறந்தாள். துரைசாமியைப்
பார்த்ததும் அவளுக்கு முகம் சுருங்கிவிட்டது, என்ன
சமாசாரம்எங்கேவந்தாய்?என்றுவெறுப்பாகக்கேட்டாள்

துரை:—(வருத்தத்துடன்) எவ்வளவோ விஸ்வாச
மாக யிருந்துவிட்டு கடைசியாக "எங்கேவந்தா யென்று
கேட்கின்றாயே" இது ஞாயந்தானா?

தங்கம்:—ஞாயமென்ன? அநியாயமென்ன? உன்னை
வைத்துக்கொண்டு நான் பட்டினியாக இருக்கவேண்டுமா
என்னுடைய வயிற்றுக்கு நான்தேடிக்கொள்ளத்தான்வே
ண்டும்.

துரை:—என்னுடைய ஆஸ்திமொத்தத்தையும் உன
க்காகவே அழித்தேன் உனக்கு கொஞ்சமும் நன்றி விஸ்
வாசமில்லை என்றான். இதைக் கேட்டுக்கொண்டேயிருந்த
கிழவி சீறி எழுந்து துரைசாமியின் முகத்தினருகில் கை
யை நீட்டி, இந்த முண்டமா கொடுத்துவிட்டது? போடா
போ அவள் கையிலிருந்த பொருளையெல்லாம் ஏமாற்றி
பிடுங்கிக்கொண்டதுமல்லாமல் இன்னுமாதலையைத் தடவ
வந்தாய். மரியாதையாக இறங்கிவிடு இல்லாவிட்டால் கழு
த்தைப் பிடித்து வெளியில் தள்ளும்படியாக சொல்லு
வேன்"

துரை:—"தாசிகள் தொழிலை சரியாக காட்டிவிட்
டீர்கள். உங்களை நிந்திக்க ஞாயமில்லை, என்னுடைய புத்
தியை நிந்திக்கவேண்டும் என்றான்.

கிழவிக்குக் கோபம் அதிகமாக வந்துவிட்டது. ஆவேசம் வந்துவிட்டதைப்போல ஆடினாள். துரைசாமி கிழவியைப்பார்க்க இவனிருக்கும் வருத்தத்தில் சிறிப்பு கூட வந்துவிட்டது "எத்தனை சவரனில் உருவம் செய்ய வேண்டும்" என்று கேட்டான். கிழவிக்கு வந்தகோபம் வரைகடந்துவிட்டது "அடே! உன்னை லேசில்விடுவதில்லை விளக்கு மாற்றினால் வீசியனுப்பவேண்டும்" என்று துடப்பக்கட்டை கொண்டுவர வேகமாக ஓடினாள், எதிரில் தூண் இருப்பது தெரியாமல் தலையில் இடித்துக்கொண்டு அப்பாடா! என்று தலையை பிடித்துக்கொண்டாள். தலையில் முட்டை கிளம்பிவிட்டது. இதற்குள்ளாககிருஷ்ணன் வந்தான். கிழவி "அடே! கிருஷ்ணா!! பார்த்தாயா அந்த அசட்டுப்பயலை? வாயில் வந்ததை யெல்லாம் பேசிவிட்டு என்னை தலையில் அடித்தான் இதோபார் வீங்கிவிட்டது" என்று மண்டையை சாய்த்துக்காட்டினாள். கிருஷ்ணன் துரைசாமியைப் பார்த்து "அடேப் பெண்பிள்ளையை அதிலும் கிழவியை நீ எப்படி அடிக்கலாம்? என்று சொல்லிக்கொண்டே ஓங்கி ஒரு அறை அறைந்தான். துரைசாமி அடி தன்மேல்பட ஒட்டாமல் பின்னால்சாய்ந்தான் கிருஷ்ணன் கொடுத்த அறை வேகமாக கதவின்மேல் விழுந்து கையில் ரத்தம் பிடுங்கிக்கொண்டது. கிருஷ்ணனுக்கு ஆத்திரம் அதிகமாய்விட்டது ஒரே பாய்ச்சலாக துரைசாமியின்மேல் பாய்ந்தான். துரைசாமி சற்று விலகிக்கொள்ளவே கிருஷ்ணன் படிகளில் உருண்டு அப்பொழுதுதான் படிகளில் ஏறிவந்துக்கொண்டிருந்த ஆறுமுகத்தை தன்னுடன் உருட்டிக்கொண்டு கீழேவந்து சேர்ந்தான். ஆறுமுகம் அலரி எழுந்து "என்ன கிருஷ்ணாகீழே தள்ளிவிட்டாயே? என்றான், கிருஷ்ணன் மறுபடியும்

மேலே போவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு ஆறுமுகத்தை தன்னுடன் அழைத்துக்கொண்டு வெளியே போய்விட்டான். துரைசாமியும் இனிமேல் அங்கிருப்பது சரியல்லவென்று வெளியே வந்துவிட்டான்.

---

## ஏழாவது அத்தியாயம்.

தாசிகளினுடைய நெஞ்சம் வஞ்சகம் குடி கொண்டது கையில் பொருளுள்ளவரையிலும் நேசமாயிருந்துவிட்டு, பொருள் காலியானதும் துரத்திவிடுவார்கள். ஆனால் எல்லோரையும் அப்படி நினைப்பதற்கில்லை. தாசிகளில் அநேகவகையுண்டு. அதில் உத்தம தாசிகள் எவன் ஒருவன் தன்மேல் முதலில் ஆசைப்படுகிறானோ அவனை கடைசிவரையிலும் நத்தி அவனுடைய குறைகளை தங்களுடையதாக மதித்து அவனுடைய க்ஷேமத்தையே கோரியிருப்பார்கள். கௌரதாசிகளென்று ஒருவகையுண்டு அவர்கள் மாலைப் பொழுதானதும் நல்ல உடை உடுத்திக்கொண்டு உடம்பெல்லாம் கில்ட் நகைகளை மாட்டிக்கொண்டு கோயிலுக்குப் போகிறவர்களைப்போலவும் அல்லதுவேறு ஏதோ வேலையாகப் போகிறவர்களைப்போலவும் ஜன நடமாட்டமுள்ள வீதிவழியே போவார்கள் வழியில் யாராவது வாலிபர்கள் போய்க்கொண்டோ அல்லது யாரிடமாவது பேசிக்கொண்டோ இருக்கக்கண்டால். அவர்களின் அருகாமையில் போகும்பொழுது ரொம்பவும் வெட்கப்பட்டவர்களைப்போல அடங்கி ஒடுங்கி ஓரமாக போவார்கள். அந்த வாலிபர்களும் அப்பொழுதுதான் ஆங்கிலத்தில் பேசுவார்கள். சிறிப்பார்கள், வா ‘பிரதர்’ காபிசாப்

பிடுவோமென்பார்கள். சில வாலிபர்கள் பின்தொடரு வார்கள். நமது தங்கமும் அந்த ஜாதியைச் சேர்ந்தவள் தான்.

அவர்களிடத்தில் பாராவது கொழுத்த வாலிபர்கள் சிக்கிக்கொண்டால் அவர்கள்பாடு அதோகதிதான். பெண் சாதி பிள்ளைகள், தாய்த்தந்தையர்கள் முதலியவர்களு டைய பாசத்தை மறக்கவைத்து அவனிட மிருக்கும் பொருளை யெல்லாம் ஆனைப்பளி சேலை வேண்டும் பூனை பப்ளி சேலை வேண்டும் மாங்காய்மாலை வேண்டும் தேங் காய்மாலை வேண்டுமென்று சிறிது சிறிதாக பறித்துக் கொண்டு நடுவீதியில் விட்டுவிடுவார்கள். வேறு ஒரு ஜாதி தாசிகள் விளக்குவைத்தவுடன் வெள்ளைவஸ்திர மணிந்து தெருவாயற்படியருகில் நின்றுக்கொண்டு போகிறவர் வரு கிறவர்களை யெல்லாம் ஜாடைசெய்து கூப்பிடுவார்கள். எவனாவது வாயிளைத்தவன் பிரியப்பட்டுவந்தால் அவ னிடமுள்ள பணத்தை பிடுங்கிக்கொள்வார்கள். 5-ரூபா யோ அல்லது 6-ரூபாயோ இருப்பதை கையில் வாங்கிக் கொண்டு "இன்னும் 8-ரூபாய்கொடு இல்லாவிட்டால் முடியாது" என்பார்கள். வந்தவன் "என்னிடம் வேறு ரூபாயில்லை என் ரூபாயை கொடுத்துவிடு நான் போகி றேன்" என்றால் "கையில் வாங்கினபணத்தை திருப்பிக் கொடுக்கும் வழக்கமில்லை வீட்டிற்குப் போய் இன்னும் மூன்று ரூபாய் கொண்டுவா" என்பார்கள். அவன் ரூபா யிற்காக அடம் சாதித்தால் உள்ளே யிருக்கும் அண்ணன் மார்களையும் தம்பிமார்களையும் அவன்மேல் ஏவிவிடுவார் கள். கடைசியில் அவன் ரூபாயை இழந்தது போதாமல் அடியும் வாங்கிக்கொண்டு போகவேண்டும்.

இத்தாசிகள் செய்யும் வியாபாரத்திற்கு கமிஷன் ஏஜண்டுகளும் உண்டு. தாசிகளிடத்தில் 100-க்கு 25-வீதம் கமிஷன்வாங்கிக்கொள்வார்கள். அவரிடத்திலும் ஒன்று இரண்டு வாங்கிக்கொள்வார்கள். பெரியவம்ஸத்து வாலிபர்களும் கையிலுள்ள பொருளையெல்லாம் தாசிகளின் பாதங்களில் அரச்சனை செய்துவிட்டு கடைசியில் வயிற்றுக்கு வழியில்லாமல் ஷெ தொழிலை கையாளுவதுண்டு.

நம்முடைய கதையை வெகுதூரத்தில் விட்டோம். தங்கத்தின் வீட்டைவிட்டுவந்த துரைசாமி நேராக கடற்கரைக்குச்சென்று ஒரு இடத்தில் உட்கார்ந்துக்கொண்டு நடந்த சம்பவங்களையெல்லாம் யோசித்துக்கொண்டிருந்தான். தங்கத்தினுடைய சூதையும் பணம் பரிப்பதற்காக செய்த தந்திரங்களையும் நினைத்து ஆச்சரியப்பட்டான் தன்னுடைய மடைமைத்தனத்தை நினைத்து தன்னையே வெறுத்துக்கொண்டான். தன்னுடைய மனைவி தனக்கு புத்தி கூறினதையும் அதை செவியில்கூட வாங்காமல் அவளை கடுகடுத்துப் பேசினதையும் நினைத்து வருத்தமடைந்தான் தன்னுடைய மனைவியைப்பார்க்க வேண்டுமென்கிற ஆவல் அதிகரித்துவிட்டது. தன்னுடைய மாமனார்வீட்டிற்கு எப்படிப் போவது என்று யோசித்தான் அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ரொம்பவும் துக்கித்தவனாய் தன் பழைய நேசனாகிய முனுசாமி நாயுடு என்பவரிடம்போய் நடந்துபோன சமாச்சாரங்களையெல்லாம் சொல்லி அழுதான். அவர் இவனுடைய நிலைமையைப் பார்த்து ரொம்பவும் வருத்தமடைந்து 2000-ரூபாய் கொடுத்து "இதை வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு தொழில் நடத்து" என்று சொன்னார். துரைசாமி ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு தன்

மனைவியை வரவழைத்து அவள் மனதின்படி பல ஊர்க ளிலிருந்து தான்யங்களை வரவழைப்பது அதை விற்று அதில் கிடைக்கும் லாபத்தை வைத்துக்கொண்டு ஜீவிப் பதுமாக இருந்தான்.

தங்கம்மாள் சம்பாதித்த பொருளை சிறிதுசிறிதாக குதிரைப்பந்தயத்தில் தோற்றுக்கொண்டிருந்தாள். பணம் வந்தவழியே செல்லும் என்பதற்கிணங்க கொஞ்சங்கொஞ் சமாக போய்க்கொண்டிருந்தது. கிருஷ்ணனும் ஆறுமுக மும் தங்கத்தை ஏமாற்றி பொருள் பிடுங்கிக்கொண்டிருந் தார்கள். "ஒரு ஜோசியனிருக்கிறான் அவனுக்கு 100-ரூபாய் கொடுத்தால் ஜெயிக்கும் குதிரைகளை சொல்லு வான்" என்பார்கள் அவளும் 100-ரூபாய் கொடுத்து கேட்டுவரும்படியாக சொல்லுவாள். இவர்கள் வயிறு நிறைய குடித்துவிட்டு ஏதாவது சில குதிரைகளில் பெயர் களை எழுதிக்கொண்டுவந்து கொடுப்பார்கள், தங்கம் அவ ற்றின் மேல் 1000-அல்லது 2000-பந்தயம் கட்டுவாள். எல்லா குதிரைகளும் தோற்றுவிடும். இவள் முகம் இஞ் சித்தின்ற குரங்கைப்போலாய்விடும்.

ஒருநாள் காலையில் கதவு தட்டும்சத்தம் கேட்டு, கதவைத்திறந்தாள். வெங்குட்டு ஐயர் உள்ளே வந்தான். அவனைப் பார்த்ததும் தங்கத்திற்கு ஆனந்தம் உண்டாய் விட்டது, இவன் தலையை தடவவேண்டும் என்று தீர்மா னித்து "சாமி! வாருங்கள் இப்பொழுதுதானா உங்களுக்கு தயவு பிறந்தது? சிதம்பரத்தில் தாங்கள் என்னை மாடிக்கு வரும்படியாக சொல்லிவிட்டு நான் வருவதற்குள்போய் விட்டீர்கள்" என்று சொல்லிக்கொண்டே ஐயரை அறை க்கு அழைத்துக்கொண்டுவந்து உட்காரவைத்தாள். கிரு ஷ்ணனுக்கு ஐயரைப் பார்த்ததும் சிறிப்பு வந்தது" என்

னசாமி அன்றையதினம் வருவதாக சொல்லிவிட்டு வராமல் போய்விட்டீர்களே?

ஐயர்:—வேலை அதிகமாக இருந்தது அதனால்தான் இத்தனை நாட்களாகவர சரிப்படவில்லை'' என்று தங்கத்தைப் பார்த்து சொன்னான்.

தங்கம்:— தாங்கள் வருவீர்களென காத்திருந்து சலித்துவிட்டது, தங்களுடைய வீட்டிற்கு யாரையாவது அனுப்பலாமென்றாலோ அட்ரஸ் தெரியாது.

ஐயர்:—துரைசாமி எங்கே?

தங்கம்:—அவர் இப்பொழுது வருகிறதில்லை. நான் உங்கள் மீதில் மோகம்வைத்திருப்பது அவருக்கு தெரிந்துவிட்டது. அதனால் அவருக்கு இங்குவர இஷ்டமில்லை? சாப்பாட்டிற்கும் ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது' மூன்றுமாத காலமாக நகைகளைவிற்று சாப்பிட்டுக்கொண்டு வருகிறேன்.

ஐயர்:—போனது போய்விட்டது நான் மாதம் ஒன்றுக்கு 200-ரூபாய் கொடுக்கிறேன். இப்பொழுது செலவிற்கு இந்த 100-ரூபாயை வைத்துக்கொள் என்று சட்டைப் பையில் கைபோட்டு 100-ரூபாயை எடுத்துக்கொடுத்தார். தங்கம் அதைப் பெற்றுக்கொண்டு ஓட்டலிலிருந்து காபி வரவழைத்து ஐயருக்குக் கொடுத்தார். ஐயர் சந்தோஷத்துடன் காபி சாப்பிட்டுவிட்டு சாயந்திரம் வருவதாகச் சொல்லிப் போய்விட்டார்.

ஐயர் போனவுடன், பொன்னுசாமி என்ற ஒரு கமிஷன் ஏஜெண்டு ஒரு யௌவன வாலிபனை அழைத்துக் கொண்டுவந்தான். வந்தவாலிபனோ தற்காலநாகரீகத்திற்

கேர்றபடி மயிரை கத்தரித்துக்கொண்டு மீசையை பாதி எடுத்துவிட்டு காலில் பூட்ஸ், கையில் வாகிங்ஸ்டிக். கண்களில் மூக்குக்கண்ணாடி இவைகளுடன் விளங்கினான். உள்ளே வந்தவுடன் பொன்னுசாமி தங்கத்தைப் பார்த்து "இவர்தான் நாராயணசாமி நாயுடு, பெருத்த தனவந்தர். வெகுநாளாக உன்மீதில் அபிப்பிராயப்பட்டிருந்தார். இன்றையதினம் தான் சமயம் வாய்த்தது"

தங்கம்:—ஏன் நிற்கின்றீர்கள் உட்காருகிறதுதானே! என்று சொல்லிக்கொண்டே நாற்காலியைக்கொண்டுவந்து போட்டாள். அவன் "தாங்க்யூ" (Thahk you) என்று சொல்லிக்கொண்டே அதில் உட்கார்ந்தான்.

கிழவி:—தம்பி! காபி கொண்டுவரச் சொல்லட்டுமா? அல்லது கலாவது ஒன்று சாப்பிடு"

நாராயண:—"நோ நோ" (No, No) வேண்டியதில்லை இப்பொழுதுதான் சாப்பிட்டேன்.

தங்கம்:—சாப்பிட்டாலென்ன? காபிமாத்திரமாவது சாப்பிடுங்கள் நம்பவீட்டில் சாப்பிடக்கூடாதா?

நாராய:— "டோன்ட் டேக் டிரபுல் (Dont take Trouble) வீணாக எதற்கு? வேண்டுமென்றால் ஒரு கப் லைட்டீ கொடுத்தால் போதும்" என்றான்.

உடனே ஆறுமுகம் ஓட்டலுக்கு ஓடினான். கிழவி நாராயணசாமி அருகில்வந்து அவனை ஏற இறங்க உற்றுப் பார்த்தாள்.

தங்கம்:—"உன்னுடைய அழகை காண்பிக்கிறாயோ? அப்புறம்போ?

கிழவி:— "ஐயையோ நீதானு ரொம்பவும் அழகு. சிறு குழந்தையாயிருக்கும்பொழுது என்னுடைய அழகைப் பார்த்திருந்தாலல்லவோ தெரியும்" பாழாய்போன பெரியம்மை 4-வயதில் வார்த்தது அதனுல் முகமெல்லாம் சொட்டை சொட்டையாகிவிட்டது, போராதகுறைக்கு விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது கீழே விழுந்தேன். அதனுல் மூக்கு உடைந்து விட்டது. இல்லாவிட்டால் எப்படி இருப்பேன் தெரியுமா? ராஜாத்திமாதிரியாக இருப்பேன்.

இதற்குள்ளாக டீயும் வந்துவிட்டது நாராயணசாமி கோப்பையை வாயில் வைத்துக்கொண்டு ரொம்பவும் நிதானமாக சிப்பிக்கொண்டு குடித்தான்.

தங்கம் தாம்பூலம் கொண்டுவந்து மடித்துக்கொடுத்தாள். நாராயணசாமி சட்டைப்பையிலிருந்து 50-ரூபாய் நோட்டை யெடுத்து தாம்பூலத்தட்டில் வைத்தான், தங்கம் "ரூபாயிற்குதானு அவசரம் வந்துவிட்டது? விஸ்வாஸம் பெரியதே யொழிய ரூபாய் பெரிதல்ல. ரூபாய்இன்று வரும் நாளைக்குப்போய்விடும். சிநேகிதர்கள் கிடைப்பது தான் கஷ்டம்" என்று சொல்லிக்கொண்டே நோட்டை எடுத்து கையில் இடுக்கிக்கொண்டாள்.

நாராயண:—"நானும் அப்படித்தான். ரூபாயைபெரிதாக நினைப்பதில்லை எத்தனையோ தாசிகள் என்னிட மிருந்து பெரியசிமாட்டியா யிருக்கிறுர்கள். வெகுநாளாக இங்கு வரவேண்டுமென்று அபிப்பிராயம் ஆனுல் ரொம்பவும் வேலை யிருந்ததால் வரசரிபடவில்லை. இன்றையதினம் தான் அவகாசம் ஏற்பட்டது" என்று சொல்லிக்கொண்டே நாற்காலியை விட்டெழுந்து "நான் சாயந்திரம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

## எட்டாவது அத்தியாயம்.

மாலை 7-மணியிருக்கும் ஐயர் கையில் ஒரு மூட்டையுடன் உள்ளேவந்தார். தங்கம் மூட்டையைக் கையில்வாங்கிக்கொண்டு "சாப்பாடாயிற்றோ? இல்லாவிட்டால் நம்ம வீட்டில் சாப்பிடுங்கள்" என்றாள்.

கிழவி:—"என்னடீ! அவர் ஐயராயிற்றே நம்ப வீட்டில் சாப்பிடுவாரா?

ஐயர்:—"நான் சாப்பிடுவேன். எனக்கு ஜாதிவித்தியாசம் கிடையாது. எல்லாவற்றிற்கும் மனம்தான் காரணம்" என்றார்.

தங்கம் எல்லோருக்கும் சாப்பாடு வட்டித்தாள் ஐயர் தான் கொண்டுவந்த மூட்டையை அவிழ்த்து அதிலிருந்த சீமைச் சாராயப்புட்டியை எடுத்தார். கிருஷ்ணனுக்கும், ஆறுமுகத்திற்கும் புட்டியைப் பார்த்தவுடன் ஆனந்தம் பொங்கிவிட்டது. ஐயர் புட்டியை உடைத்து எல்லோருக்கும் ஊற்றிக்கொடுத்தார். அதிகமாக குடித்தவள் கிழவிதான். ஐயருக்கு பாட்டு கிளம்பிவிட்டது பாட ஆரம்பித்துவிட்டார். மனம் போனபடி பாடினார், கிருஷ்ணன் மிருதங்கம் வாசிக்க ஒரு தகர டப்பாவை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். கிழவிக்கு உற்சாகம் அதிகமாக கிளம்பிவிட்டது. மனம் போனபடி கூத்தாடினாள். மணி 10-அடித்தது எல்லோரும் சோர்ந்துபோய் விட்டார்கள். ஐயர் படுக்கையில்போய் படுத்துக்கொண்டார். சிறிது நேரத்திற்குள்ளாக நாராயணசாமி அவ்விடம்வந்து சேர்ந்தான் தங்கம் அவனை வேறு அறைக்கு அழைத்துக்கொண்டு

போய் உட்காரவைத்து "ஏன் இவ்வளவு தாமதம்? மணி 11-ஆய்விட்டதே" என்ருள்.

நாராய,—"கொஞ்சம் வேலே யிருந்தது அதனுல் தாமதமாய்விட்டது.

தங்கம்:—நானும் வெளியேபோயிருந்து இப்பொழுதுதான் வந்தேன்." ஒருவருக்கு 500-ரூபாய்த் தரவேண்டும். அவர்கள் ரொம்பவும் தொந்தரவு செய்தார்கள். சௌகார்பேட்டைக்குப்போய் என்னுடைய நகைகளே அடகுவைத்து 500-ரூபா வாங்கிக் கொடுத்தேன்,

நாராயண:— "நகைகளே ஏன் அடகு வைத்தாய் என்னேக் கேட்டால் நான் கொடுக்கமாட்டேனு? நாளேய தினம் ரூபாய் கொடுக்கிறேன் நகைகளே மீட்டுக்கொண்டு வந்துவிடு.

தங்கம்:—(சிறித்துக்கொண்டே) "அதற்கென்ன வாங்கிவிட்டால் போகிறது" என்ருள். அடுத்த அறையிலிருந்து ஐயர் தங்கத்தைக் கூப்பிட்டார். கிழவி தங்கத்தினிடம் வந்து, "தலே வலிக்கிறது கொஞ்சம் கியாழம் போட்டுக் கொடுத்துவிட்டு வந்துவிடு" என்ருள். தங்கம் நாராயணசாமிக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு ஐயரிடம்வந்தாள் ஐயர் "இவ்வளவு நேரம் எங்கேபோயிருந்தாய்?" என்று கேட்டார். அதற்கவள் கிழவிக்கு உடம்பு அசௌக்கியமென்றும், கியாழம்போட போயிருந்ததாகவும் சொன்னுள்.

இப்படியாக இவள் இருவரிடம் பணம் பரித்துக்கொண்டிருந்தாள். சிறிது நாட்களுக்குள்ளாக. ஐயரும் பாப்பராகிவிட்டார், நாயுடு அவர்களுக்கும் கை ஒடுங்கிவிட்டது அவர்கள் தங்கத்தினிடம் வருவதை அறவே ஒழித்துவிட்

டார்கள். தங்கம்மாளும் நகைகளையும் வீட்டையும் விற்று குதிரைப்பந்தயத்தில் தோற்றுவிட்டு மறுப்படியும் சுமை தாங்கியருகில் வந்துசேர்ந்தாள்.

நமது துரைசாமி நாளுக்குநாள் வியாபாரத்தை விருத்திசெய்தான் அவனுடைய அதிர்ஷ்டம் ஏரக்குறைய 10-லட்சம் ரூபாயிற்கு சம்பாதித்துக்கொடுத்தது. இவனுடைய செல்வாக்கான நிலைமையைக் கேள்விப்பட்ட தங்கமும் கிழவியும் மறுபடியும் இவனை எப்படியாவது வலையில் போடுவதென்று யோசித்தார்கள், ஒரு நாள் கிழவி துரைசாமியின் வியாபாரஸ்தலத்திற்கு வந்தாள் கிழவியை பார்த்ததும் துரைசாமிக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. என்னசொல்லுகிறாள் பார்ப்போம் என்று பேசாமலிருந்தான். கிழவி இவனைப் பார்த்ததும் ஓ வென்று அழுதாள்,

துரை:—"என்னகிழவி ஏன் அழுகிறாய்?

கிழவி,—தம்பி! நீ ஊரில் இருக்கிறாயா? உன்னைப் போல ஒரு கல்மனதுடையவர்களை இது வரையிலும்பார்த்ததில்லை, நீ வந்துவிட்டபிறகு உன்னுடைய ஏக்கமே தங்கத்தைக் குடிகொண்டது. சாப்பாடும் சரியாக சாப்பிடுகிறதில்லை. எப்பொழுது பார்த்தாலும் உன்னை நினைத்து அழுதுக்கொண்டிருக்கிறாள், எவ்வளவோ ஜோசியர்களுக்கு ரூபாவைக் கொட்டிக்கொடுத்து உன்னைக் கண்டுபிடிக்க முயன்றாள். மந்திரவாதிகளுக்கும் எவ்வளவோ கொடுத்தாள். இப்பொழுது அவள் இருக்கும் நிலைமை இன்னும் ஒருவாரத்தில் இறந்துவிடுவாள்போலிருக்கிறது, இந்த சமயம் நீ வராவிட்டால் நான் பெண்ணை பறிகொடுக்கவேண்டியதுதான்" என்று சொல்லி மேலும் மேலும் அழுதாள்.

துரைசாமி இவர்களுடைய சூதையும் தந்திரத்தையும் நினைத்து ஆச்சரியப்பட்டான். இவர்களுக்கு புத்தி புகட்ட வேண்டுமென்று உத்தேசித்து கிழவியைப்பார்த்து 'கிழவீ என் அழுகிறாய்? அழாதே நான் சாயந்திரம் அவ்விடம் வருகிறேன். தங்கத்தினிடம் நான் வருவதாக சொல்'' என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

மாலை 5-மணியாயிற்று துரைசாமி தன்னுடன் இரண்டு வேலைக்காரர்களை அழைத்துக்கொண்டுபோய் தங்கத்தின் வீட்டெதிரில் அவர்களை நிறுத்திவைத்துவிட்டு உள்ளே சென்றான். இவனைப் பார்த்ததும் தங்கம் ஓடிவந்து இவன் கால்களைப்பிடித்துக்கொண்டு கதறியழுதாள் கிருஷ்ணனும், துரைசாமியும் இவனைப்பார்த்ததும் இத்தனைநாட்களாக தாங்கள் எங்கே போயிருந்தீர்கள்? நாமெல்லோரும் எவ்வளவோ சிநேகிதமாக இருந்தோம் அதையெல்லாம் மறந்துவிட்டீர்கள் என்றார்கள். துரைசாமி ஒன்றும்பேசாமல் ஒருநாற்காலியில் உட்கார்ந்தான். தங்கம் துரைசாமியைப் பார்த்து உங்களுடைய மனம் கல்லோ இரும்போ பாலும் நீரும்போல இருந்துவிட்டு திடீரென்று பிரிந்துவிட்டீர்கள். ஆண்பிள்ளைக்கு மனம் ரொம்பவும் அழுத்தமென்பதை இப்பொழுதுதான் கண்டேன்' என்று வாயிற்குவந்தபடி யெல்லாம் பசப்பிக்கொண்டிருந்தாள். துரைசாமி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு மௌனமாகயிருந்துவிட்டு "நீதானே என்னைவரவேண்டாமென்று சொன்னாய், நானாகபோய்விடவில்லையே?

தங்கம்:—ஒ! ஹோ! நானும் கிழவியும் விளையாட்டாக செய்ததை நிஜமென்று நம்பினீர்களா? என்று ஆச்சரியப்பட்டவளைப்போல கேட்டாள் இதற்குள்ளாக கிழவி ஓடிவந்து "பார்த்தாயா. நான் அப்பொழுதே சொல்லவில்லை

யா? நாம் விளையாடினதை தம்பி நிஜமென்று நினைத்துக் கொள்ளுமென்று' என்று தங்கத்தின் முகத்திற்கு அருகில் தன்கையை நீட்டி சொன்னாள். துரைசாமி "நீங்களும் விளையாடினீர்கள், நானும் விளையாட்டாக இத்தனை நாள் வாராமலிருந்தேன் உன்னுடைய நகைகளெல்லாம் எங்கே?

தங்கம்:—கொஞ்சம் நகைகளைவிற்று செலவுசெய்து விட்டேன், மீதியாயிருந்தவைகளை ஒருநாள் இரவு திருடன்வந்து கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டான் என்றாள். துரைசாமியின் ஆட்கள் தங்களுக்கு உத்தரவிட்டிருந்தபடி ஒருவன் கோர்ட் சேவகன் மாதிரியாகவும், மற்றொருவன் கடன் கொடுத்தவன் மாதிரியாகவும்உள்ளேவந்தார்கள். துரைசாமி அவர்களைப்பார்த்ததும்பயந்தவனைப் போல் அபிநயித்தான். கோர்ட் சேவகன் துரைசாமியிடம் ஒரு காகிதத்தை நீட்டினான். துரைசாமி ஒன்றும் பேசாமல் கையொப்பமிட்டான் இதற்குள்ளாகக் கிழவி யார் என்ன சமாசாரம் என்று கேட்டாள்.

கடன்காரன்:—"இவர் எனக்கு 1000-ரூபாய் தர வேண்டும் அதற்கு வாரண்டு கொண்டுவந்திருக்கிறேன்?

சேவகன்:—(கிழவியும் தங்கத்தையும் பார்த்து) நீங்கள் ஜாமீன் கொடுத்தால் விட்டுவிடுகிறோம்.

கிழவி:—"நாங்கள் எதற்கு ஜாமீன்கொடுக்கவேண்டும்? இதற்குமுன்பு இவரை எங்களுக்கு தெரியவே தெரியாது"

துரை:—"என்ன கிழவி! என்னுடைய சொத்துக்கள் மொத்தத்தையும் உனக்கு அர்ப்பணம் செய்திருக்கிறேன் என்னை முன்பின் தெரியாது என்று சொல்லுகிறாயே?

கிழவி:—"அடா அசட்டுப்பயலே! நீயா எங்களுக்கு அர்ப்பணம் செய்தாய் கடன்காரர்மெச்சிக்கொள்ளபேசு கிறாயா? அடே! ஆறுமுகம்!! இவனைப்பிடித்து வெளியில் தள்ளு" என்று குதித்தாள்.

ஆறுமுகம் ஓடிவந்து துரைசாமியின் கழுத்தில் கை வைத்தான் பக்கத்திலிருந்த துரைசாமியின்வேலைக்காரன் ஒரு அறை அறைந்தான் இதற்குள்ளாக கிருஷ்ணனுக்கு கோபம் வந்துவிட்டது. ஆத்திரத்துடன் வேலைக்காரனை அடிக்க ஓடிவந்தான். மற்றொரு வேலைக்காரன் அவனை மறித்து ஒரே அறையில் கீழேசாய்த்தான்.

துரைசாமி:—(தங்கத்தையும் கிழவியையும் பார்த்து) பணப்பிசாசுகளே! உங்களைப்போல் தந்திரத்திலும் சாமர்த்தியத்திலும் மிகுந்தவர்களை நான் பார்த்ததேயில்லை. பணமுள்ளவரையிலும் மரியாதையும், நேசமும் சந்தோஷமும், பணம் கரைந்துவிட்டால் அவமரியாதையும் பகையையும், வெறுப்பையும் காட்டுகிறதா நீங்களெல்லோரும் மறு ஜன்மத்தில் குஷ்டரோகிகளாக பிறந்து வயிற்று சோற்றுக்குத்தாளம் போடுவீர்களென்று சொல்லிவிட்டு தன் வேலைக்காரர்களை அழைத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டான் தங்கமும் கிழவியும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து ஆச்சரியத்துடன் அசைவற்று நின்றார்கள். சுபம்! சுபம்!

முற்றிற்று.

சென்னை-600 008.
175083

Copies can be had from:—

M. RADHAKRISHNA NAIDU

No-29, KARUPPANNAN STREET

Sowcarpet, **MADRAS.**